Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 21 ஞாயிற்றுக்கிழமை (05.07.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 199

# புகையிரதம், பாடசாலைகள் விமான நிலையம், பேருந்து

## கொரோனாவின் 2ஆவது அலை ஏற்படக்கூடிய ஆபத்தான இடங்கள்

(கொழும்பு)
இலங்கைக்குள் கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாவது அலை ஏற்படக்கூடிய ஆபத்தான நான்கு இடங்கள் தொடர்பாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. 23

தீக்காயத்துக்குள்ளான

## இளம் குடும்பப் பெண் மரணம்

(வவுனியா)
தீயில் எரிந்த நிலையில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த இளம் குடும்பப் பெண் 23

தொல்லியல் என்ற பெயரில்

# இலங்கையில் தொடரும் தமிழின அழிப்பு

## ஐ.நாவில் எடுத்துரைப்பு

(நியூ யோர்க்)
தமிழர்களின் தாயகமான வடக்கு கிழக்கு பிரதேசங்களில் தொல்லியல் அடையாளங்களை பாதுகாப்பது எனும் போர்வையில் தமிழின அழிப்புகள் தொடர்ந்து இடம்பெறுவதாக ஐ.நாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. (2ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில்
தேடுதல் நடவடிக்கை

(பனிக்கன்குளம்)
முல்லைத்தீவு மாத்தளன் பகுதியில் கடற்புலிகளின் முகாம் ஒன்று அமைந்துள்ள காணியில் புதைக்கப்பட்ட வெடிபொருட்கள் மற்றும் பெறுமதியான பொருட்களைத் தேடி தோண்டும் நடவடிக்கை ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.
கடந்த இரண்டு 23

கொக்குவிலில்

## தாலிக்கொடி அறுப்பு

(யாழ்ப்பாணம்)
கொக்குவில் பொற்பதிப் பகுதியில் வீதியால் சென்ற வயோதிபப் பெண்ணிடமிருந்து 9 பவுண் தாலிக்கொடி திருடர்களால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம் 23

## 10 தமிழ் அரசியல் கைதிகள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)
மகசின் சிறைச்சாலையில் இருந்தத தமிழ் அரசியல் கைதிகள் 10 பேர் அனுராதபுரம் திறந்தவெளி சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.
மகசின் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளில் இரண்டு வருடத்துக்குட்பட்ட தண்டனைக் கைதிகள் 10 பேர் நேற்று திடீரென அநுராதபுரம் திறந்த 23

## தமிழர்களின் மனங்களை வெல்ல நடவடிக்கை – மகிந்த 03

## கிளிநொச்சியில் விபத்து இளைஞன் உயிரிழப்பு



(கிளிநொச்சி)
கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் நேற்று மதியம் நடந்த விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். 23

தேர்தல் சட்ட விதிகளை மீறிய

# இரு வேட்பாளர்கள் உட்பட 109 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)
தேர்தல் சட்டவிதிகளை மீறிச் செயற்பட்டதாக இரு வேட்பாளர்கள் உட்பட 109 பேரை பொலிஸார் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.
தேர்தல் சட்டவிதிகளை மீறி செயற்படும் நபர்கள் தொடர்பில் பொலிஸார் எவ்வகையான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர் என்பது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பிரிவிடம் வினவியபோது அவர்கள் கூறியதாவது.
பாராளுமன்ற தேர் 23

ராஜ் ஜுவல்லர்ஸ்
அடகு பிடிப்பவர்கள்
Best Choice
1 பவுண் - 22 கரட்டிற்கு 75,000/=
வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளது.
1 வருட கால அவகாசம்
உங்களுக்கு நாங்கள் தருகின்றோம்.
(3183)
இல. 31C, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி ( சந்தைக்கு அருகில் )
Tel : 021 221 7287 / 076 636 1238

பொலிஸ், இராணுவம் சுற்றிவளைப்பு

# 7 மணித்தியாலங்கள் முடங்கியது தருமபுரம்

(தருமபுரம்)
பொலிஸ் மற்றும் இராணுவத்தின் சுற்றி வளைப்பில் தருமபுரம் பகுதி நேற்று 7 மணித்தியாலங்கள் 23

# அறிவிக்கப்பட்ட திகதியில் தேர்தல் நடைபெறும்

மகிந்த தேசப்பிரிய 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 5ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## பத்மநாதன் பாவலன்

**(05.07.2020)**

அன்புள்ள பாவலா!
எங்கிருக்கிறாய்?
எமை விட்டு வெகுதூரம் நீ சென்று ஆண்டுகள் ஐந்து ஆனதே..
என் செய்வோம்? இன்று நீ இன்றி வாழப் பழகிக்கொண்டோம்.
சிரிக்கவும் செய்கிறோம்
எம் உடலில் இவ்வுயிர் இருக்கும் வரை நினைவுகளில் நீ இருப்பாய்
எம் நிழலுடனே நீ நடப்பாய்
மறு பிறப்பு ஒன்று உண்டானால் மீண்டும் சந்திப்போம்.
நீ முந்திச் செல்வதற்கல்ல. ஒன்றாக வாழ்வதற்காக....


(C-9327)

ஆனந்த பவனம், 1ம் கட்டை,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

-குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

மண்ணில்
12
-
11
-
1985



விண்ணில்
09
-
06
-
2020

## சற்குணரத்தினம் துஷிகாந்தன்

யாழ்ப்பாணம், வட்டுத்தெற்கு, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் சவுதி அரேபியாவை ( றியாத் ) தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சற்குணரத்தினம் துஷிகாந்தன் அவர்கள் ( 09.06.2020 )செவ்வாய்க்கிழமை அன்று சவுதி அரேபியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சின்னம்மா மற்றும் கந்தசாமி - பொன்னம்மா ஆகியோரின் பேரனும் சற்குணரத்தினம் - மங்களராஜேஸ்வரி தம்பதிகளின் மூத்த மகனும் அஜந்தன், அபிலாஷா, அபிராமி மற்றும் பிரகாஷ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரதீபன் அவர்களின் மைத்துனனும் பிரதுஷ்யா மற்றும் பிரதிக்ஷா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (06.07.2020) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெறும் என்பதை அறியத் தருகின்றோம். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-9834)

வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.

Tel-076 971 8318

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம்
05
-
11
-
1956



மறைவு
04
-
07
-
2020

## நீக்கிலாப்பிள்ளை லூயிஸ் மரியநாயகம்

கரம்பனைப் பிறப்பிடமாகவும் யாழ்.கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலாப்பிள்ளை லூயிஸ் மரியநாயகம் நேற்று (04.07.2020) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீக்கிலாப்பிள்ளை - மொனிக்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற யோசேப்பு (ஆசிரியர்) - மாகிறேற் தம்பதியினரின் அன்பு மருமகனும் றோசபெல்லின் (சாந்தி) அன்புக் கணவரும் சலோமிதா (யாழ். பல்கலைக்கழக விவசாயப் பீடம் , 3ம் வருடம்), பிறேமிதா (யாழ். பல்கலைக்கழகம் விஞ்ஞான பீடம், 3ம் வருடம்) அன்புத் தந்தையும் லில்லி பிறீடா, மேரியசிந்தா, அகஸ்ரீன், மேரி கிறேஸ், நோயல், விஜயா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆனந்தி, சுகந்தி (பிரான்ஸ்), சுமதி, காலஞ்சென்ற அருந்ததி மற்றும் றஞ்சன், றஞ்சினி, நீற்றா, வரதராஜன், யேசுதாசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை அவரின் இல்லத்தில் இன்று (05.07.2020) ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் யாழ்.கொன்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(3208)

16/3 கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

077 889 2139
021 222 0038

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி சபாநாதன்

(கலை வாரிதி, ஓய்வு பெற்ற தேசிய நீர் வடிகாலமைப்பு சபை – பம் ஒப்பரேற்றர்)

சங்கரத்தை, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சபாநாதன் நேற்று (04.07.2020) சனிக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணேசபிள்ளை, பரமேஸ்வரன், கனகநாயகம், லோகநாயகி, யோகேஸ்வரி, இலட்சுமணநாதன் மற்றும் சிதம்பரநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற மகேஸ்வரி, சிவபாக்கியம் மற்றும் தங்கம்மா, தேவயாணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவநாயகி, தவநாயகி, காலஞ்சென்ற சுகுணசபேசன், ஜனகராஜா (சுரேஸ்), செல்வானந்தன், தனவதனன், குகானந்தன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் கோபிகா, வசீகரன், கரிகரன், நந்தகோபன், சாய்சங்கர், யாதர்ஷ், தர்னீஷ், கீர்த்தனா, யதீஷ், ஜஸ்வின், அஞ்சனா, அய்சுபா, அஸ்வினா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.07.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-9836)

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

தகவல்:- குடும்பத்தினர்
077 676 8927

# வடக்கு, கிழக்கு மக்களின் மனங்களை வெல்ல நடவடிக்கைகள் சிறப்பாக முன்னெடுக்கப்படும்

## பிரதமர் மகிந்த உறுதி



(கொழும்பு)

**தெற்கு மக்களின் ஆதரவில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தாலும் வடக்கு மற்றும் கிழக்கு மக்களை புறக்கணிக்க வில்லை என்றும் வடக்கு, கிழக்கு மக்களின் மனங்களை வெல் வதற்கான நடவடிக்கைகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்ப டும் என்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உறுதிபடத்தெரிவித்தார்.**

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

தெற்கு மக்களின் ஆதரவுடனே ஜனாதிபதித் தேர்தலை வெற்றி கொண்டோம் என்பதை வெளிப்படையாக குறிப்பிட வேண்டும். இருப்பினும் ஜனாதிபதி அனைத்து இன மக்களின் தலைவராகவே செயற்படுகிறார். எமது ஆட்சியில் வடக்கு மற்றும் கிழக்கு வாழ் மக்கள் புறக்கணிப்பப்படுவதில்லை. அவர்களையும் இணைத்துக் கொண்டே அரசியல் ரீதியில் பயணிப்போம் என அவர் தெரிவித்தார். (ஐ-4)

# விஜயதாச ராஜபக்ஷவின் சட்டத்தரணி பட்டத்தை கழற்றியே தீருவேன்

## ராஜித சபதம்



(கொழும்பு)

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவரிடம் 20 மில்லியன் ரூபாய் பணத்தை பெற்றுக் கொண்டதாக தனக்கு எதிராக குற்றம் சுமத்தியுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் விஜயதாச ராஜபக்ஷவுக்கு எதிராக வழக்கு தொடரப் போவதாக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவரே தன்னை விமர்சிக்கும் நபர்களுக்கு பணத்தை வழங்கும் உலகில் இருக்கும் ஒரே வர்த்தகர். கடந்த 2016 ஆம் ஆண்டிலும் 5 மில்லியன் ரூபாவை வழங்கியதாக கூறினார். அப்போது மருத்துவர் சயுர, அவன்கார்ட் நிறுவனத்துடன் நடந்த தொலைபேசி உரையாடலை முற்றாக பதிவு செய்திருந்தார். இதனால் அந்த குற்றச்சாட்டிற்கு எனக்கு அன்றும் பதில் இருந்தது.

தற்போது இந்த தொகை 20 மில்லியனாக மாறியுள்ளது. எவருக்கும் காசோலையில் பணம் என்று எழுதி இதனை செய்ய முடியும். ஆனால் பணம் வழங்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

விஜயதாச என்ற மனிதர் பணத்திற்காக எதையும் செய்வார். அதிகாரத்திற்காக எதையும் செய்வார். அப்படித்தான் கட்சி விட்டுக் கட்சி தாவுவார். அவரிடம் கொள்கை ரீதியான விடயங்கள் எதுவுமில்லை. எங்களுக்கு கொள்கை இருக்கின்றது. எம்மை பணம் கொடுத்து விலைக்கு வாங்க முடியாது. விஜயதாச போன்று எம்மை அதிகாரத்தாலும் வாங்க முடியாது.

எங்களைத் தோற்கடிக்க 50 கோடி ரூபாவை செலவிடப் போவதாக அவன்கார்ட் தலைவர் கூறியிருந்தார். அந்தப் பணத்தில் ஒரு பகுதியை விஜயதாச ராஜபக்ஷவுக்கு செலுத்தியிருக்கலாம்.

இந்த வழக்கை முன்னெடுத்துச் சென்று விஜயதாச ராஜபக்ஷவின் ஜனாதிபதி சட்டத்தரணி பதவியை அல்ல, சட்டத்தரணி என்ற பட்டத்தையும் கழற்றுவேன் எனவும் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். (ஐ-4)


பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ் தேர்தல் மாவட்டம்



சுயநலமற்ற, கண்ணியமான அரசியலுக்கு...



6



7

தருமலிங்கம் சித்தார்த்தன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

பாலச்சந்திரன் கஜதீபன்
(முன்னாள் மாகாணசபை உறுப்பினர்)

1 2 3 4 5 6 7 8 9 10

(C-016)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA)

# கற்றல் நடவடிக்கைகளுக்கு மாத்திரம் பாடசாலைகள் முன்னுரிமை அளிக்க வேண்டும்

## கல்வியமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

**தவறவிட்ட கற்றல் நேரத்தை தழுவும் முகமாக மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்காக மாத்திரம் சகல பாடசாலைகளும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.**

சகல ஆசிரியர்களும் மாலை 3.30 மணிவரையில் பாடசாலையில் தங்கி நிற்பது அத்தியாவசியமல்ல. நேர அட்டவணையின்படி குறிப்பிட்ட கற்றல் பாடவேலைகளைப் பூர்த்தி செய்வது போதுமானதாகும்.

நாளை 6 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நாட்டின் அனைத்துப் பாடசாலைகளும் பிள்ளைகளுக்காக திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சினால் ஏற்கனவே சகல மாகாண மற்றும் வலய அதிகாரிகளைப் போலவே பாடசாலை அதிபர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட சுகாதார பாதுகாப்பு முறைமைகளை துல்லியமாகப் பின்பற்றி, பாடசாலையில் அதற்கான மருத்துவ அறைகள், கை கழுவும் வசதிகள் உள்ளடங்கிய அடிப்படை வசதிகள் குறித்து முழுக் கவனம் செலுத்தப்படல் வேண்டும் என அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஒரு குழந்தைக்கு காய்ச்சல், இருமல், சளி அல்லது பிற நோய் அறிகுறிகள் தென்பட்டால் அவர்களைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம்.

அத்துடன், பாடசாலைகள் திறப்பது குறித்து உத்தேசிக்கப்பட்டுள்ள விசேட வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற காலங்களில் பாடசாலைக்கு ஆசிரியர்கள் வருகை தரும்போது தமக்குரிய நேர அட்டவணைப்படி உரிய காலத்திற்குள் கற்பிப்பதற்கு மட்டும் பாடசாலையில் தங்குவது போதுமானது எனவும் அதிபரினால் மேலதிக பணிக்ள் ஒப்படைக்கப்பட்ட சந்தர்ப்பங்களைத் தவிர, அனைத்து ஆசிரியர்களும் பாடசாலையில் பிற்பகல் 3.30 மணி வரையில் தங்கி நிற்பது அத்தியாவசியமல்ல என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் ஆசிரியர்களினால் பாடசாலைக்கு வருகை தருதல் மற்றும் வெளியேறுதல் தொடர்பாக பராமரிக்கப்படும் அட்டவணையில் குறிப்பிட்ட நேரத்திற்கமைவாக குறிப்புகளை பதிவு செய்வதுடன் நேர சூசியின்படி அந்தந்த ஆசிரியருக்குரிய பாட வேலைகளுக்குள் கற்பித்தல் நடவடிக்கைகளை நிறைவு செய்த பின்னர் பாடசாலையில் இருந்து வெளியேறுவதற்கு சந்தர்ப்பங்கள் வழங்க வேண்டும் எனவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# கனரக வாகன சில்லுக்குள் சிக்கி 10 வயது மாணவன் பரிதாபமாகப் பலி


(கல்முனை)

கல்முனைப் பகுதியிலுள்ள குளமொன்றினை புனரமைக்கும் பணியில் ஈடுபட்ட கனரக வாகனத்தின் சில்லுக்குள் அகப்பட்ட பாடசாலை மாணவனொருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கல்முனை துரைவந்தியமேடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் ஐந்தில் கல்வி பயின்று வந்த. மோ.ஜதுர்சன் (வயது-10) என்ற மாணவரே உயிரிழந்தார்.

உயிரிழந்த மாணவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-2)

# கருணா அம்மானைக் கைது செய்யக்கோரி தாக்கல் செய்த மனுவிற்கு எதிராக முதற்கட்ட ஆட்சேபனைகள் முன்னெடுப்பு



(கொழும்பு)

முன்னாள் பிரதியமைச்சரும் விடுதலைப் புலிகளின் முன்னாள் கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாகவும் செயற்பட்ட கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனை கைது செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவிற்கு எதிராக முதற்கட்ட ஆட்சேபனைகளை எழுப்பவுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த மனு அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் தாக்கல் செய்யப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுவிற்கு எதிராக ஆட்சேபனைகளை முன்வைப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஹரிப்பிரிய ஜயசுந்தர முன்னிலையாகவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

யுத்த காலத்தில் இராணுவத்தினரில் இரண்டாயிரம் முதல் மூவாயிரம் பேர் வரையிலானவர்களை புலிகள் அமைப்பில் தான் அங்கம் வகித்த போது கொலை செய்திருந்ததாக கருணா அம்மான் தெரிவித்திருந்த சர்ச்சைக்குரிய அறிக்கை தொடர்பில் கைது செய்ய உத்தரவிடக் கோரி குறித்த அடிப்படை உரிமை மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# தே.அ.அ.விண்ணப்பங்களை 17 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவும்

## ஆட்பதிவுத் திணைக்களம்

(கொழும்பு)

தேர்தலில் வாக்களிக்கும் பொருட்டு, செல்லுபடியாகும் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு ஆட்பதிவுத் திணைக்களம் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டதை தொடர்ந்து இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்களும் 18 வயதிற்கு மேற்பட்டவர்களும் ஜுலை 17 ஆம் திகதிக்கு முன்னர் தங்களது விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

எதிர்வரும் 17 ஆம் திகதிக்குப் பின்னர் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பப்படிவங்கள், தற்காலிக அடையாள அட்டை வழங்கும் பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.

இத்தற்காலிக அடையாள அட்டைகள், தேர்தலுக்காக மாத்திரம் வழங்கப்படும். அனைத்து விண்ணப்பப்படிவங்களும் ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு முன்னர் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

அத்தோடு, தற்காலிக அடையாள அட்டைகளும் ஜுலை 29 ஆம் திகதி வரை வழங்கப்படும். ஜுலை 29 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் செயற்படுத்தப்படாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலத்தை நீடிக்கக்கோரிக்கை

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக் காலம் நீடிப்பதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன குறித்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதியிடம் எழுத்து மூலமாக கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக கடந்த ஜனவரி மாதம் 22 ஆம் திகதி முதல் குறித்த நடைமுறைக்கு வரும் வகையில் குறித்த ஆணைக்குழுவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உருவாக்கினார்.

அதன்படி இந்த ஆணைக்குழுவின் காலம் எதிர்வரும் 16 ஆம் திக்தியுடன் நிறைவுக்கு வரும் வகையில் தற்போது இதன் காலவரையறையை நீடிப்பதற்கு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கோள் மண்டலம் மீளத்திறப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டுள்ள கொழும்பில் அமைந்துள்ள கோள் மண்டலத்தை நாளை மறுதினம் 7 ஆம் திகதி மீண்டும் திறக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இதனைக் கூறியுள்ளது.

சுகாதாரத்துறையினர் வழங்கியுள்ள பரிந்துரைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய கோள் மண்டலத்தை மீண்டும் திறக்க உள்ளதாக தகவல் திணைக்களம் கூறியுள்ளது.

சமூக இடைவெளியைப் பேணி, குறைந்தளவிலான பார்வையாளர்கள் மாத்திரமே கோள் மண்டலத்தை பார்வையிட அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அரசாங்கம் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஜ-4)

# இராசிபலன்

05.07.2020
ஆனி 21, ஞாயிற்றுக்கிழமை
பூரணை முற்பகல் 10.57 மணிவரை
பூராடம் பின்னிரவு 12.15 மணிவரை
சுபநேரம் 8.57-10.27 மணிவரை
இராகுகாலம் 4.27-5.57 மணிவரை
சந்திராஷ்டமம்- மிருகசீரிடம், திருவாதிரை
சித்தாமிர்தம் வளவன்


மேஷம்
இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.


ரிஷபம்
கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, குடும்பத்தினரிடையே சிறு சிறு முரண்பாடுகள் தோன்றி மறையும், எடுத்த காரியத்தில் தாமதம் ஏற்படலாம்.


மிதுனம்
பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.


கடகம்
தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு சிறப்பினைத் தரும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், உடல்நலன் சீராகும்.


சிம்மம்
உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம் பெறும் வாய்ப்புண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.


கன்னி
பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்புண்டு.


துலாம்
சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க சகோதர வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.


விருச்சிகம்
குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், நண்பர்கள் வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.


தனுசு
காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


மகரம்
இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் கூடும் நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.


கும்பம்
உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் கௌரவம் கூடும் நாள் காரிய அனுகூலமுண்டு.


மீனம்
வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு.

இறைவனின் அழகில் உன்னை
நீ இழந்துவிட தியானம் செய்

# ரணிலிடம் வாக்குமூலம்



(கொழும்பு)
மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வாக்குமூலம் பெறுவதற்காக குற்றப் புலனாய்வு பிரிவினர் அவருடைய இல்லத்திற்கு சென்றிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

குற்றப் புலனாய்வு பிரிவின் குழுவொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு சென்றிருந்தது.

நல்லாட்சி அரசாங்கத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் மத்திய வங்கி பிணைமுறிகள் மோசடி தொடர்பில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், இந்த விவகாரம் தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக் கொள்வதற்காகவே குற்றப் புலனாய்வு பிரிவினர் ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்திற்கு சென்றனர் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# ஒருவர் கைது

(கொழும்பு)
சட்டவிரோதமான முறையில் தொழில்பெற முயன்ற நபரொருவரை மேல்மாகாண பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவினர் கைது செய்தனர்.

குறித்த சந்தேக நபர் அரசியல்வாதியால் அனுப்பப்பட்டவர் என தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு தனியார் நிறுவனம் ஒன்றில் இவ்வாறு தொழில் பெறுவதற்கு முயற்சித்து ள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஜ-2)

# 53 பில்லியன் ரூபா கடன் திட்டத்திற்கு மத்திய வங்கி ஒப்புதல்




(கொழும்பு)
கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட 20 ஆயிரத்து 240 வியாபாரங்களுக்கென 53 பில்லியன் ரூபாவுக்கான கடன் திட்டத்திற்கு மத்திய வங்கி ஒப்புதல் அளித்துள்ளது

4 சதவீத வட்டி வீதத்தில் தொழிற்பாட்டு மூலதனத்தினை வழங்குவதற்காக சௌபாக்யா கொவிட்-19 மறுமலர்ச்சிக் கடன் திட்டத்தினை அறிமுகப்படுத்தி நாட்டில் பொருளாதார நடவடிக்கை புத்துயிர் பெறுவதற்கு மத்திய வங்கி ஆதரவளிக்கின்றது.

இந்தக் கடன் திட்டமானது சுயதொழில் மற்றும் தனிப்பட்டவர்கள் உள்ளடங்கலாக ஒரு பில்லியன் ரூபாவுக்கு குறைவான வருடாந்த புரள்வுடன் கூடிய, கொவிட்-19 மூலம் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு கிடைக்கப் பெறுகின்றது.

ஒரு பில்லியன் வருடாந்த புரள்வு மட்டுப்பாடானது சுற்றுலா, ஏற்றுமதிகள் மற்றும் தொடர்புபட்ட ஏற்பாட்டுச் சேவை வழங்குதல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ள வியாபாரங்களுக்கு ஏற்புடையதாகாது என மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ஜ-2)


# கண்ணீர் அஞ்சலி



பதிவாளர் நாயகம் திணைக்களம்
யாழ்.காணி மாவட்டப் பதிவகத்தில்
மேலதிக மாவட்டப் பதிவாளராக
நீண்ட காலம் கடமையாற்றி
ஓய்வுபெற்ற அமரர்
நடராஜா பாலஸ்கந்தன்
அவர்கள்
அமரத்துவம் அடைந்த செய்தியை
அறிந்து துயருறுகின்றோம்.
அன்னாரின் சிறப்பான சேவையை
நினைவு கூருகின்றோம்.
அவரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா இறைவனின்
பாதார விந்தங்களில்
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
(3200)

உதவிப் பதிவாளர் நாயக மற்றும் காணி,மாவட்டப் பதிவக
உத்தியோகத்தர்கள் செயலகம், யாழ்ப்பாணம்

# நீங்காத நினைவுகள்

மலர்வு 05.07.1975 உதிர்வு 17.04.1999



செல்வி .தவராஜா அருணா

ஒளி சிந்தும் புன்னகையாய்
எம் வாழ்வோடு கலந்த
எங்கள் உதிரத்தின்
உறவே!
அன்னையின் மறுவடிவான
அன்புருவே!
கரைந்தோடும் காலத்தின்
கரையினில் காத்திருக்கின்றோம்
விடிவின் ஒளிதேடிய
எம் உயிரின் நினைவுகளுடன்
(3181)

"ராஜா வாசம்" மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்.

சகோதரர்கள், மைத்துனிகள்,
மருமக்கள்.



# சிறப்பாக நடைபெற்ற சர்வதேச ஒலிம்பிக் தின நிகழ்வு



(கொழும்பு)

சர்வதேச ஒலிம்பிக் தினம் இலங்கை ஒலிம்பிக் குழுவினால் (National Olympic Committee, Sri Lanka) கடந்த ஜூன் மாதம் 23 ஆம் திகதி கொழும்பு 7 சுதந்திர சதுக்கத்தில் கொண்டாடப்பட்டது.

மூன்றரை மணித்தியாலங்கள் கொண்ட இந்நிகழ்வானது ஒலிம்பிக் விளக்கு ஏற்றல் மற்றும் மரநடுகை உள்வாங்கியதோடு சர்வதேச, தேசிய மட்ட விளையாட்டு அரங்கின் பிரபலங்களின் பேச்சுக்களோடு இனிதே நிறைவேறியது.

நிகழ்வில் முன்னாள் ரக்பி மற்றும் தடகள தேசிய முன்னணி வீரரான 96 வயதுடைய சுமந்திரன், "சும்மா" நவரத்தினம் மற்றும் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ரொஷான் மகாநாம ஆகியோர் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

ஒலிம்பிக் தின விழுமியங்களுக்கு ஏற்ப அன்றையதினம் Teqball என்கிற புதிய விளையாட்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ் ஒலிம்பிக்தினமானது ஒன்லைன் மூலம் நடத்திய ஒரு சில நாடுகளில் இலங்கையும் அடங்கும்.

இம்முறை இலங்கை ஒலிம்பிக் குழுவானது "UnitedBy Media" என்ற புதிய கருப்பொருளின் அடிப்படையில் 28 சமூக வலைத்தள தூதுவர்களை (Social Media Ambassadors) தெரிந்தெடுத்து அவர்கள் மூலம் சகலவிதமான இலங்கை ஒலிம்பிக் குழுவின் சமூகவலைத்தள பதிவுகளை மக்கள் மத்தியில் சென்றடையச் செய்தது.

இதில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் வணிக பீடத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் செல்வி கிறேஸ் ஹென்ஸ் மனும் உள்வாங்கப்பட்டுள்ளார்.

இதில் 3 வெளிநாட்டு சமூக வலைத்தள தூதுவர்களும் இணைக்கப்பட்டுள்ளனர். இப் புதிய கருப்பொருளானது இலங்கை ஒலிம்பிக்குழுவினால் முதன்முறையாக நடைமுறைப் படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஒலிம்பிக் தினத்தை முன்னிட்டு அகில இலங்கை கவிதை போட்டி மூன்று மொழிப்பிரிவிலும் நடத்தப்பட்டது. தமிழ் மொழிப்பிரிவில் வகம் தீன் நிஜாஸ் (ஒலுவில்). தர்ஷினி சிவநாதன் (பண்டாரவளை) ஆகியோர் முறையே முதலாம் மற்றும் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

மேலும் ஒன்லைன் வினா விடை போட்டி, உடற்பயிற்சி வீடியோக்கள், நேர்காணல். கட்டுரைகள் மற்றும் மரம் வளர்ப்பு பிரசாரம் இச் சமூக வலைத்தளத் தூதுவர்கள் மூலம் முன்னெடுக்கப்பட்டது.

ஒன்லைன் ஒலிம்பிக் தினத்தைத் தொடர்ந்து விளையாட்டு சம்பந்தமான வெம்பினார் மற்றும் கல்வி சம்பந்தமான வெம்பினார் என்பவற்றை ஒன்லைனில் நடத்திய பெருமை இலங்கை ஒலிம்பிக் குழுவையே சேரும்.

இந் நிகழ்ச்சிகளுக்கு 33 வெளிநாட்டவர்களின் உரையாடல்கள் "United By Education", "United By Talent" & "United By Experience". என்ற மூன்று கருப்பொருளின் கீழ் கலந்துரையாடப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த பழைய மாணவன் கோபிநாத் சிவராஜா இலங்கை ஒலிம்பிக்குழுவின் சந்தைப்படுத்தல் மற்றும் மீடியா பொறுப்பதிகாரியாக செயற்படுகிறார். இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மீளவும் நாளை 6 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

1.கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்

2.தேசிய கணக்கீட்டு டிப்ளோமா போன்ற கற்கை நெறிகளே இவ்வாறு ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஏனைய கற்கைநெறிகள் யாவும் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும்.

கல்லூரிக்கு வருகைதரும் மாணவர்கள் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நடந்துகொள்ளுமாறு பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஜ-5)

# இறங்குதுறைகள் இன்மையால் கடற்றொழிலாளர்கள் சிரமம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நெடுந்தீவு கிழக்கு கரையோரப்பகுதியில் சரியான இறங்குதுறைகள் இன்மையால் தமது கடற்றொழில் உபகரணங்களை கரைசேர்ப்பதிலும் படகுகளை பாதுகாப்பதிலும் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாக பிரதேச கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.நெடுந்தீவு கிழக்கில் பிடாரி அம்மன் கோவில் முதல் காளவாய் முனை வரையான கரையோரப்பகுதிகளில் கடற்றொழில்களில் ஈடுபட்டு வரும் கடற்றொழிலாளர்கள் இறங்கு துறைகள் இன்றி பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த கரையோரப் பகுதிகளில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் கரையோரப் பகுதிகளில் உரிய இறங்கு துறைகள் இல்லாத நிலை காணப்படுவதுடன் கரையோரப்பகுதிகளில் முருகைக்கற்பாறைகளும் காணப்படுகின்றன.

இதனால் தினமும் கடற்றொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் தமது கடற்றொழில் படகுகளை கரையில் இருந்து கடலுக்குக் கொண்டு செல்வதிலும் கரைசேர்ப்பதிலும், பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன் கடும் காற்றுக்காலங்களில் படகுகளை பாதுகாக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் கடற்றொழிலாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ஜ-5-315)

# தொகுதிப் பாடங்களிலும் அக்கறை வேண்டும்; உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகள் தொகுதிப்பாடங்களில் அக்கறை இல்லாமல் செயற்படுவதால் வடமாகாண கல்வி வீழ்ச்சியடைவதுடன் எதிர்காலத்தில் கிடைக்கவுள்ள உயர்கல்வி வாய்ப்பினையும் மாணவர்கள் இழக்க நேரிடுகின்றது என உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. குறித்த சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

கொரோனா வைரஸ் தாக்கத்தினால் இந்த வருடம் பயனற்ற முறையில் மூன்றுக்கு மேற்பட்ட மாதங்கள் கடந்த நிலையில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு முக்கிய பாடங்கள் எனக் கூறிக் கற்பிக்கப்படுகின்றது.

ஏனைய பாடங்களுக்குச் சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை என ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் பாடப்பரப்பு பூர்த்தி செய்து கொள்வதில் துறைசார்ந்த ஆசிரியர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டி வருகின்றது.

அதுமட்டுமன்றி எதிர்பார்க்கின்ற சித்திவீதத்தினையும் அடைய முடியாது.

இதனைக்கருத்தில் கொண்டு தொகுதிப்பாடங்களுக்கும் முன்னுரிமை வழங்கி மாணவர்களை கல்வி கற்க ஊக்குவிக்க வேண்டும். ஏனெனில் 2019 ஆம் ஆண்டிற்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 518 மாணவர்கள் தமிழ், கணித பாடத்தில் சித்தியடைந்தும் தொகுதிப் பாடங்களில் சித்தியடைய தவறியமையினால் உயர்கல்வி வாய்ப்பையும் இழந்து வடமாகாணத்தையும் கீழ்நோக்கிக் கொண்டு சென்றுள்ளது.

தொகுதிப் பாடங்களில் A தர சித்தியினை பெறுவதன் மூலம் கல்வியியல்கல்லூரி, பல்கலைக்கழகங்கள், துறைசார்ந்த கற்கை நெறிகளைத் தொடர முடியும்.

இதனை முக்கியப்படுத்தி தொகுதிப்பாடங்களிலும் பாடசாலைகள் அக்கறை கொண்டு செயலாற்ற முனைய வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது.(ஜ-4)

# பாடசாலைகளில் நிறைவுபெறும் தொற்று நீக்கும் பணிகள்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக இயல்பு நிலை முழுமையாகப் பாதிக்கப்பட்டு அனைத்துப் பாடசாலைகளும் பாதுகாப்புக் கருதி மூடப்பட்டிருந்தன.

எனினும் சிறிது இயல்பு நிலை ஏற்பட்டதன் காரணமாக அனைத்துப் பாடசாலைகளும் கடந்த மாதம் 29 ஆம் திகதி மீளவும் திறக்கப்பட்டன.

கல்வி யமைச்சின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து அனைத்துப் பாடசாலைகளுக்குமான தொற்றுநீக்கி மருந்து விசிறும் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் யாழ். மாநகர பதில் முதல்வர் து.ஈசனால் விண்ணப்பங்கள் கடந்த மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னதாகப் பதில் முதல்வரிடம் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

அத்துடன் மாநகர சுகாதார வைத்திய அதிகாரியின் நெறிப்படுத்தலிலும் பாடசாலைகளின் அதிபர்களின் கோரிக்கைக்கமைவாகவும் தொற்றுநீக்கி மருந்து விசிறும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்படி 42 பாடசாலைகளில் 37 பாடசாலைகளுக்கான தொற்று நீக்கி மருந்து விசிறும் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளன. (ஜ)



# தந்தையின் வழியில் செல்லும் சஜித்; புலிகளை மீள உருவாக்கவே முயற்சி

## திலங்க சுமதிபால குற்றச்சாட்டு

(கொழும்பு)

தந்தையின் வழியில் செல்வதாக பிரசாரம் செய்யும் சஜித் பிரேமதாஸ அதிகாரத்துக்கு வந்த பின்னர் புலிகளை மீண்டும் தலைதூக்க வைக்க முயற்சிப்பதை யாரும் அனுமதிக்க மாட்டார்கள் என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கொழும்பு மாவட்ட வேட்பாளர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து செயற்படும் சஜித் அணி ஆட்சியை கைப்பற்றுவதற்கு முயற்சிப்பதைவிட கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவின் அதிகாரத்தை கைப்பற்றவே முயற்சிக்கின்றது.

ரணசிங்க பிரேமதாஸ நாட்டின் ஜனாதிபதியாக இருக்கும்போது விடுதலைப் புகளுக்கு ஆயுதம் வழங்கியதை ஐக்கிய தேசியக் கட்சியினரே கூறி வருகின்றனர்.

அப்படியானால் சஜித் பிரேமதாஸ அதிகாரத்துக்கு வந்தால்.. விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்க இடமிருக்கின்றது. அதற்கு நாங்கள் இடமளிக்க முடியாது.

எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை மேலும் சக்தி பெறச்செய்ய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாகிய நாங்கள் அனைவரும் நடவடிக்கை எடுப்போதும் என அவர் தெரிவித்தார். (ஐ-4)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: சதயம் 1
கி.பா: செவ் 11 ல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. சொந்த வாகனம் உரிமையாளர் (சாரதி).
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10906

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 4
கி.பா: சூரி,செவ் 10 இல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: பட்டதாரி. ஆசிரியர் (அரச)
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் பார்க்கும் பெண்
தொ.இ: B/10907

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 4
கி.பா: செவ் 6 இல்
உயரம்: 168cm
தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. சிகை அலங்கரிப்பாளர்.
எதிர்பார்ப்பு: தகுந்த பெண்
தொ.இ: B/10909

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அனுசம் 4
கி.பா:செவ் 8 இல்
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. ஹோட்டலியர்.
எதிர்பார்ப்பு: உள்நாட்டு படித்த பெண்
தொ.இ: B/10911

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சித்திரை 1
கி.பா: செவ் 10 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: **B.Eng Degree in Electronic Engineering in UK. Accounting & Part time tutor in UK**
எதிர்பார்ப்பு: பொறியியலாளர், வைத்தியர், கணக்காளர்.
தொ.இ: G/8358

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 4
கி.பா: செவ் 5 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: **B.Sc, Technical officer (Australia)**
எதிர்பார்ப்பு: அவுஸ்திரேலியா வர விரும்புபவர்கள். பொறியியலாளர், வைத்தியர், கணக்காளர் போன்றோர்.
தொ.இ: G/8359

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: ரோகினி 1
கி.பா: 34 செவ் 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த.
எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர் மட்டும்
தொ.இ: G/8370

பிறப்பு: 1991 இந்து
இராசி: விருச்சிகம்
கி.பா: 33¼ செவ் 7 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில் B.M.S. Bank Staff Assistant.
எதிர்பார்ப்பு:.பட்டதாரி. பொறியியலாளர், கணக்காளர், வங்கி உத்தியோகத்தர் போன்றோர் விரும்பத்தக்கது.
தொ.இ: G/8380

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு நிலையத்திற்கு சிம்காட் ரீலோட் மீள்நிரப்பு அட்டைகள் விற்பனை மற்றும் போட்டோ கொப்பி எடுப்பதற்கும் தெரிந்த வேலையாட்கள் தேவை.
(இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்)

(3201)

**தொடர்புகளுக்கு: 0773611282**



பழைமை வாய்ந்த

# ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜவசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
- கணவன் – மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்



ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசிய முறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (3189)

**ரெங்கசாமி** கண்டி. அம்பத்தன்ன - **077 112 3471**
Viber - 076 466 4153
வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



# நூல் வெளியீடு

பேராசிரியர் முருகர் குணசிங்கம் அவர்களின்

## புலமை சார் மூன்று ஆய்வு நூல்கள் ஒரே மேடையில்...

| காலம்: | இடம்: | நேரம்: |
|---|---|---|
| 05.07.2020 (ஞாயிற்றுக்கிழமை) | தங்கம்மா முதியோர் வளாகம் (புதுக்குளம், கனகராயன்குளம், - ஏ-9 வீதி) | மாலை 2.00-4.30 |

பிரதம விருந்தினர்: Dr.T.சத்தியமூர்த்தி
பணிப்பாளர்- யாழ்.வைத்தியசாலை, வடமாகாணம்.

**நூல் அறிமுகவுரை:**

கலாநிதி K.T.கணேசலிங்கம்
துறைத்தலைவர் - அரசியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

திரு.எஸ்.ஜெயச்சந்திரன்
முகாமையாளர்-ஆசிரியர் நடுவகம்.வவுனியா.

சுகாதாரப் பிரிவில் அனுமதி பெறப்பட்டுள்ளது.

(C-9835)

பல சிறப்பு விருந்தினர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். நூலாசிரியர்.



# Canada VISA

நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்

**STUDENT VISA** Study, Work & Settle
- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம் - Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்

**VISIT VISA** பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்

**REFUSED VISA** உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

**Sponsor Letters**
Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

வயதெல்லை இன்றி Visa கிடைப்பதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து தரப்படும்

**Hotline: 0777-761 346**

flex Institute
6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk
Flex Institute

STUDENT VISA
VISIT VISA
TOURIST VISA

USA / UK
Australia
New Zealand
Italy / France
Swiss
Germany
Romania
Norway
Finland
Poland

FLEX Graphic

10 வருட கால நம்பிக்கையான சேவை

# மக்களை உசுப்பேற்றும் அரசியல் எம்மிடமில்லை
# கொள்கைப் பற்றுடன் மக்கள் சேவையே எமது நோக்கு

## டக்ளஸ் தேவானந்தா உறுதி



(கொழும்பு)

ஈபிடிபியிடம் மாத்திரமே மாற்றுக்கருத்தும் மாற்றுக்கொள்கையும் இருப்பதுடன் ஏனைய கட்சிகள் மக்களை உசுப்பேற்றி சூடேற்றும் அரசியலையே செய்வதாக கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், வரலாற்று விடயங்களை தீர்ப்பதாக தெரிவித்து அதனைவிட பலமடங்கு பிரச்சினைகளை கடந்தகால தலைமைகள் எமது மக்களுக்கு கொடுத்திருக்கின்றார்கள்.

அதிலிருந்து மக்களை விடுவித்து இருப்பதை பாதுகாத்து கொண்டு, முன்னோக்கி செல்ல வேண்டும் என்பதே எனது எண்ணம். அதனை ஒரு மாறுக் கொள்கையாகவும், பொறிமுறையாகவும் நான் முன் வைத்திருக்கின்றேன்.

வீணைச் சின்னத்திற்கு மாத்திரமே மாற்றுக்கருத்தும் மாற்றுக்கொள்கையும் இருப்பதுடன் அதனை வெற்றிகொள்வதற்கான பொறிமுறையும் இருக்கிறது.

ஏனைய கட்சிகளிடம் அது இல்லை. மக்களை உசுப்பேற்றி சூடேற்றும் அரசியலே அவர்களது கொள்கையாக உள்ளது.

வவுனியா பொருளாதார மையமானது மக்களின் உணர்வுகளை புரிந்துகொண்டு அவர்களது ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு அமைக்கப்படவில்லை. அதன் உள்நோக்கத்துடன் மக்களின் எதிர்பார்ப்பிற்கு புறம்பான வகையில் பல கோடி நிதி செலவளிக்கப்பட்டுள்ளது.

அந்த கடைத்தொகுதியில் வவுனியா மாவட்ட மக்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்பதை தொடர்புடைய அமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார். விரைவில் அது உரிய வர்த்தகர்களுக்கு பிரித்து வழங்கப்படும்.

கிழக்கு மாகாண தொல்பொருள் செயலணியில் சிறுபான்மை சார்ந்தோர் இல்லை என்று குற்றச்சாட்டு வந்திருக்கின்றது.

தற்போது எனது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அதில் சிறுபான்மையினரை நியமிக்கவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அந்த விடயத்தில் சிறு த்வறு நடந்திருக்கிறது. அதனை திருத்துவதற்கு ஜனாதிபதி முயற்சிக்கின்றார் என டக்ளஸ் மேலும் தெரிவித்தார். (ஜ-4-299)

---

## நாங்கள் தான் கருணாவை புனர்வாழ்விற்கு உட்படுத்தினோம்

### மத்தும பண்டார கூறுகிறார்



(கொழும்பு)

நாங்கள்தான் கருணாவை தாய்லாந்திற்கு அனுப்பி, புனர்வாழ்விற்கு உட்படுத்தினோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராக களமிறங்கியுள்ள ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கருணா அம்மான் வெளியிட்டுள்ள சர்ச்சையான கருத்து தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை முன்னெடுக்கப்படாமை தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கருணாவை நாங்கள் சீர்திருத்தினோம். அதன் பின்னரே அவர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலகினார்.

நாங்கள் கருணாவுக்கு வேறு எதனையும் செய்யவில்லை. ஆனால் தற்போது பொதுஜன பெரமுனவில் உள்ளவர்கள் தான் அவரை அரசியல்வாதியாக மாற்றியுள்ளனர். எனினும் கருணா அம்மான், தனது அறிக்கை தொடர்பாக உண்மையான விளக்கத்தை கட்டாயம் வழங்க வேண்டும்.

மேலும் நாம், ஆட்சிக்கு வந்தவுடன் அவரை நீதிமன்றத்தில் நிறுத்துவோம்" என அவர் குறிப்பிட்டார். (ஜ-4)

---

## 100,000ரூபாய்க்கு 9,000 ரூபா தரகுப்பணம்

# போதைப்பொருள் வர்த்தகர்களுடன் தொடர்பிலிருந்த வங்கி அதிகாரி கைது

(கொழும்பு)

போதைப்பொருள் வர்த்தக வலையமைப்புடன் இயங்கி வந்த வங்கி அதிகாரியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் விற்பனை மூலம் கிடைக்கும் பணத்தை, கடத்தல்காரர்கள் ஓய்வு பெற்ற வங்கி அதிகாரியிடம் ஒப்படைத்துள்ளதாகவும், அந்தப் பணத்தை அவரது தனிப்பட்ட வங்கிக் கணக்கில் வைப்பு செய்துள்ளதாகவும் மேற்கு மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இந்த ஓய்வுபெற்ற வங்கி அதிகாரியுடன் 10 போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கு தொடர்பு இருந்தது தெரிய வந்துள்ளது.

போதைப்பொருள் வர்த்தகர்கள் வழங்கும் பணத்தை தனது வங்கியில் வைப்பிலிட்டு வைத்திருந்து விட்டு, பணத்தை வேறு வங்கிக் கணக்கிற்கு மாற்றும் போது, ஒவ்வொரு 1 இலட்சம் ரூபாவிற்கு அவர் 9 ஆயிரம் ரூபா அறவிட்டுள்ளார்.

அந்த நபரின் மடிக்கணினி மற்றும் பல ஆவணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ஜ-4)

---

## சுவிஸில் இலங்கையர் மீது கத்திக்குத்து

(சூரிச்)

சுவிற்சர்லாந்தின் லுட்சன் மாநிலத்தில் இலங்கையர் ஒருவர் மீது கத்திக்குத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினம் லுட்சன் மாநிலத்தில் உள்ள வாசல்திராஸா வீதியில் உள்ள வணிகத் தொகுதி ஒன்றில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த தாக்குதல்தாரியும், தாக்குதலுக்கு இலக்கான நபரும் பேசிக்கொண்டிருக்கையில் ஏற்பட்ட தகராறின் போது தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக நேரில் பார்த்தவர்கள் சாட்சியம் வழங்கியுள்ளனர்.

இதன் போது கழுத்துப் பகுதியில் தாக்குதலுக்குள்ளான 45 வயதுடைய இலங்கையர் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் 65 வயதுடைய நபரை கைது செய்ய லுட்சன் மாநில பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதனிடையே, வாசல்திராஸா வீதியில் உள்ள வணிகத்தொகுதியில் அதிகளவில் தமிழ்க் கடைகள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

---

## வனப்பகுதி நிலத்தை பிரதேச செயலர்களிடம் ஒப்படைப்பதற்கான முடிவை நிறுத்துங்கள்

### ஜனாதிபதிக்கு ஜே.வி.பி.கடிதம்

(கொழும்பு)

வனவிலங்கு பாதுகாப்புத் துறையின் கீழ் உள்ள 5 இலட்சம் ஹெக்டேயர் வனப் பகுதியை பிரதேச செயலாளர்களுக்கு வழங்குவதற்கான முடிவை இடைநிறுத்தக் கோரி ஜே.வி.பி. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் எழுதியுள்ளது.

அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்கவின் கையெழுத்திடப்பட்ட குறித்த கடிதத்தில், நிலப் பரப்பு தொடர்பான தற்போதைய சுற்றறிக்கையை ரத்து செய்வது சுற்றுச்சூழல் பாதிப்புக்கு வழிவகுக்கும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பூர்வீக விலங்குகள் மற்றும் தாவரங்கள் உள்ள இது போன்ற வனப்பகுதிகளில் சுற்றுச்சூழல் ஆர்வலர்களால் அண்மைக்காலங்களில் கண்டுபிடிக்கப்பட்டன.

எனவே வனப் பாதுகாப்பு மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாக்க நடைமுறையில் உள்ள சட்டங்களை பலவீனப்படுத்துவதைத் தவிர்க்குமாறும் ஜனாதிபதியை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்தகைய நிலப்பரப்பை பிரதேச செயலகங்களுக்கு ஒப்படைத்தால் அவை பல்வேறு பெரியளவிலான திட்டங்களுக்காக ஒப்படைக்கப்படலாம் என்றும் பிமல் ரத்நாயக்க அக்கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார். (ஜ-4)

---

# வீடியோ கேம் விளையாடியவர் மூளை நரம்பு வெடித்து மரணம்

(கொழும்பு)

5 மணி நேரத்திற்கும் அதிகமாக தனது கையடக்க தொலைபேசியில் வீடியோ கேம் விளையாடிக் கொண்டிருந்தவர் மூளையின் நரம்பு வெடித்து பரிதாபமாக உயிரிழந்தார்.

கொழும்பு, கிராண்ட்பாஸ் பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார். அவர் கடந்த 29 ஆம் திகதி இரவு 9 மணி முதல் அதிகாலை 2 மணி வரை அறையில் தனது கையடக்க தொலைபேசியில் விளையாடிக் கொண்டிருந்த போதே இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. (ஜ-4)

# உள்ளூராட்சி சபைகளின் பரிணாமம்

**07**


## கலாநிதி க.தவலிங்கம்

தவிசாளர் – எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.




1970 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றம் சென்று, பின்னர் அன்று ஆளும் கட்சியாகவிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தாவிய அ.தியாகராஜாவை அதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலில் முதன்மை வேட்பாளராகக் களமிறக்கியது.

ஏற்கனவே, தமிழ் இளைஞர் ஆயுதக் குழுக்களால் துரோகி என முத்திரை குத்தப்பட்டிருந்த தியாகராஜா, மீண்டும் ஒரு சவாலான சூழலை எதிர்கொண்டார். ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் தமிழரொவரும் களமிறங்கக் கூடாது என்று மீண்டும் தமிழ் இளைஞர் ஆயுதக் குழுக்கள் எச்சரித்திருந்த சூழலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் அ.தியாகராஜா களமிறக்கப்பட்டார்.

**யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் முதன்மை வேட்பாளராக களமிறக்கப்பட்ட அ.தியாகராஜா 1981 மே 24 இல் போராளி ஒருவரால் மூளாயில் தேர்தல் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது சுடப்பட்டார்.**

1981 மே 24 இல் போராளி ஒருவரால் மூளாயில் தேர்தல் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது சுடப்பட்டார். இவர் பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இறந்தார்.

வடக்கில் அபிவிருத்தி சபையின் அதிகாரத்தை அம்மக்களுக்கு வழங்காது பலாத்காரமாக கைப்பற்றிவிட அன்றைய ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் மேற்கொண்ட முயற்சி விபரீதத்தில் தான் முடிந்தது. பெருமளவு தேர்தல் முறைகேடுகளை செய்தும் யாழ்ப்பாண நூல் நிலையத்தைக் கொளுத்தியும் அட்டகாசம் செய்தது. அதன் விளைவு ஆளும் அரசாங்க கட்சியை தோற்கடிப்பதற்காக வடக்கு-கிழக்கு பகுதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியை வெற்றி பெறச் செய்தார்கள் மக்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி 263,369 வாக்குகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் 10ஆசனங்களையும் கைப்பற்றியது. அத்தனை தேர்தல் மோசடிகளை செய்தும் கூட ஐ.தே.க. 23,302 மட்டுமே பெற்றுக்கொண்டது. குமார் பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரஸ் 21,682 வாக்குகளைப் பெற்றது.

**மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி 263,369 வாக்குகளைப் பெற்று யாழ்.மாவட்டத்தில் 10 ஆசனங்களையும் கைப்பற்றியது. அத்தனை தேர்தல் மோசடிகளைச் செய்தும் கூட ஐ.தே.க. 23,302 மட்டுமே பெற்றுக்கொண்டது. குமார் பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரஸ் 21,682 வாக்குகளைப் பெற்றது.**

### 04.06.1981இல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் முடிவுகள்

(யாழ்.மாவட்ட தேர்தல் முடிவுகள் காலம்தாழ்த்தி ஜூன் 17 ஆம் திகதியே அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்)

இத் தேர்தலை எடுத்துக் கொண்டால் ஐ.தே.க. மிகவும் மோசமான தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டது. பல வாக்குப் பெட்டிகள் காணாமல் போயின. ஆனால் அந்த தேர்தல் செல்லுபடியானது என்று தேர்தல் ஆணையகம் அறி வித்தது. தேர்தலுக்காக தமிழ் பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டிருந்த தேர்தல் ஊழியர்கள் ஐ.தே.கவின் ஆதரவாளர்களாக இருந்தார்கள். ஐ.தே.க. வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள மாவட்டங்களில் அம்பாறை மாவட்டத்தில் மாத்திரம் வென்றது.

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் யாழ்.மாவட்டம் -1981

| கட்சி | பெற்ற வாக்குகள் | பெற்ற ஆசனங்கள் |
|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 23,302 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 2,63,369 | 10 |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | 21,682 | - |
| சுயேட்சை | 7,646 | - |
| நிராகரிக்கப்பட்டவை | 4,332 | |

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் மன்னார் மாவட்டம் -1981

| கட்சி | பெற்ற வாக்குகள் | பெற்ற ஆசனங்கள் |
|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 14,713 | 2 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 16,459 | 2 |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | | |
| சுயேட்சை | 1,511 | - |
| நிராகரிக்கப்பட்டவை | 169 | - |

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் வவுனியா மாவட்டம் -1981

| கட்சி | பெற்ற வாக்குகள் | பெற்ற ஆசனங்கள் |
|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 10,976 | 2 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 18,048 | 2 |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | 268 | - |
| சுயேட்சை | - | - |
| நிராகரிக்கப்பட்டவை | 527 | - |

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் முல்லைத்தீவு மாவட்டம் -1981

| கட்சி | பெற்ற வாக்குகள் | பெற்ற ஆசனங்கள் |
|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 8,451 | 2 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 13,815 | 2 |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | 650 | - |
| சுயேட்சை | - | - |
| நிராகரிக்கப்பட்டவை | 178 | - |

### மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் காலத்தில் யாழ்.மாவட்டத்தில் நடந்த சம்பவங்கள்

தேர்தல் காலத்தில் யாழ்.மாவட்டத்தில் நடந்த சம்பவங்கள் பற்றி தமிழ் தந்தி இணையத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது. "1981 மே மாதத்தின் இறுதி நாட்கள் மாவட்ட சபைத் தேர்தல் பிரசாரத்தில் இருந்த பொலிஸார் மீது ஒரு சிறிய தாக்குதல் நடத்தப்பட்டது. தருணம் பார்த்துக் காத்திருந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்ட குண்டர்களும் யாழ்ப்பாணத்தை எரிக்கத் தொடங்கினர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள புத்தகக் கடைகளுக்கு தீவைக்கப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடு தீக்கிரையாக்கப்பட்டன. 1981 மே 31 நள்ளிரவை எட்டிக் கொண்டிருந்தது யாழ்ப்பாணத்தின் முதல் தினசரிப் பத்திரிகையான ஈழநாடு பத்திரிகை அலுவலகத்திலும் தீ வைக்கப்பட்டது.

அந்த அலுவலகம் எரிந்து கொண்டிருந்தது. எரிந்து கொண்டிருந்த பத்திரிகை அலுவலகத்தில் பணியில் இருந்தவர்களில் பலரும் சிதறி ஓட இருவர் அலுவலகத்தினுள் சிக்குண்டனர்.

**மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் காலத்திலேயே யாழ்.பொது நூலகமும் தீக்கிரையாக்கப்பட்டது. 1981 ஜூன் முதலாம் திகதி தீக்கிரையாக்கப்பட்டது. வரலாற்றில் மன்னிக்க மறக்க முடியாத கறுப்பு நாள் இது!**

நூலகத்துக்கு எதிரே சில அடி தூரத்தில்தான் யாழ்.தலைமைக் பொலிஸ் நிலையம் உள்ளது. மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் பாதுகாப்புக்கு என கொழும்பிலிருந்து வந்திருந்த பொலிஸார் தங்கியிருந்த துரையப்பா விளையாட்டரங்கமும் நூலகத்துக்கு எதிரேதான் இருக்கிறது. இவ்வகையான பாதுகாப்பு உள்ள நூலகம் தீப்பிடித்து எரிந்தது என்றால் ஆச்சரியம்தான்!

(தொடரும்...)

# கிழக்கில் தமிழ் மக்களின் இருப்பு கேள்விக்குறி; தக்க வைக்க மொட்டிற்கு வாக்களியுங்கள்



## வியாழேந்திரன் அழைப்பு

(மட்டக்களப்பு)

**கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் இருப்பு கேள்விக்குறியாகியுள்ளது. இதனை தக்கவைத்துக் கொள்ள வேண்டுமாயின் மொட்டுச் சின்னத்திற்கு வாக்களித்து ஆளுந்தரப்பு பிரதிநிதிகளை அதிகரிக்க வேண்டும் என பொதுஜன பெரமுனவின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.**

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிழக்கு மாகாணத் தமிழர்களின் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்கு போராடும் இனமாக தமிழ் மக்கள் இருக்கின்றார்கள். நாங்கள் 100 இற்கும் மேற்பட்ட மக்கள் போராட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

இன்றைய இருப்பு, நில, நிர்வாகம் பறிபோகும் நிலையில் தமிழ் மக்கள் துடுப்பிழந்த அரசியல் தலைமைகளையே கொண்டிருக்கிறார்கள்.

சகல அதிகாரமும் உள்ள அரசியல் தலைமைத்துவம் இல்லாத காரணத்தால் எங்களின் இருப்பை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கெல்லாம் காரணம் எம்மை பிழையாக வழிகாட்டிய தமிழ் தலைமைகளே ஆகும்.


கிழக்கில் தமிழர்களின் தலைவர்கள் என்று கூறிக் கொண்டு களத்தில் நிற்கின்ற தமிழ் அரசியல் தலைவர்கள் கிழக்கில் உள்ள தமிழர்களின் நில வளத்தினையும் உரிமையினையும் அபிவிருத்தியையும் முன்னெடுத்துச்செல்ல தங்களிடம் என்ன திட்டங்கள் உள்ளது என்பதை பகிரங்கப்படுத்த வேண்டும்.

தமிழ் மக்கள் வாழ்வதற்குரிய, கல்வி, பொருளாதாரம், விவசாயம், உட்கட்டமைப்பு வசதிகள், அபிவிருத்தி சார்ந்த, திட்டங்கள் இல்லாமல் தமிழ் மக்களிடம் வாக்குச் சேகரிப்பது தமிழ் மக்களை ஏமாற்றும் செயலாகும்.

தமிழ் மக்கள் இவர்களை ஆழமாக சிந்தித்து தமது வாக்குரிமையை கட்சி பேதங்களை மறந்து எம் இருப்பை இல்லாமல் செய்யும் கூட்டங்களுக்கு வாக்களிக்காமல் கிழக்கில் துரித அபிவிருத்தியை முன்னெடுத்து கிழக்கை தமிழர்கள் அபிவிருத்தி செய்வதற்கு பொருத்தமான தரப்புக்கு வாக்களிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (ஜ-2)

# எங்களுடைய அரசாங்கத்தின் கீழ் மக்களுக்கு சலுகைகள் வழங்கப்படும்

## ஐ.தே.க.தலைவர் ரணில் உறுதி



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் எதிர்காலத்தில் பொது மக்களுக்கு பல சலுகைகள் வழங்கப்படும் என அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர், நாட்டின் ஒவ்வொரு துறையும் அபிவிருத்தி செய்யப்படும் என்றும் கூறினார்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் கீழ் மக்களுக்கு மின்சாரம் மற்றும் நீர் கட்டணங்கள் மற்றும் கடன்களுக்கான நிவாரணம் மற்றும் அவர்களுக்கு பணம் செலுத்துவதற்கான கால அவகாசங்களும் சலுகைகளும் வழங்கப்படும் என்று கூறினார்.

அத்துடன் இது பல நேரமறையான முன்னேற்றங்களின் தொடக்கமாக மட்டுமே இருக்கும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# தேசிய பாடசாலைகள் அமைக்க நடவடிக்கை

## ஜனக பண்டார தகவல்

(கொழும்பு)

மாத்தளை மாவட்டத்தில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் பிரதேச செயலாளர் பிரிவு தோறும் தேசிய பாடசாலைகளை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தளை மாவட்ட முதன்மை வேட்பாளரும் அமைச்சருமான ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

தம்புள்ள பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் நாட்டின் பொருளாதாரம் கல்வி, கலாசாரம், அபிவிருத்திப் பணிகள் என்பன மிகவும் மோசமான நிலைக்கு சென்றுள்ளன.

இவ்வாறு வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரம், கல்வி, கலாசார, அபிவிருத்திப் பணிகள் யாவும் உரிய முறையில் அரசாங்கத்தினால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரின் எண்ணக்கருவில் நாடு கட்டியெழுப்பப்பட்டு வருகிறது என்றும் பாடசாலைகள் சகல வசதிகளும் கொண்ட பாடசாலைகளாக மாற்றியமைக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

# மக்கள் தகுதியானவர்களுக்கு வாக்களித்து நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும்

## கூறுகிறார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



(கொழும்பு)

"பதாதைகளில் இருக்கும் எனது பெயர் மற்றும் உருவத்தை மறைக்கலாம். ஆனால், பொலநறுவை மக்களின் உள்ளத்தில் பதிந்திருக்கும் எனது பெயரை யாராலும் மறைக்க முடியாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலநறுவை பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எனது 52 வருட அரசியல் வாழ்க்கையில் பொலநறுவை மாவட்டத்துக்கு பல வேலைத் திட்டங்களை மேற்கொண்டுள்ளார்.

எனவே, அடுத்துவரும் ஆட்சியில் பொலநறுவை மாவட்டத்துக்கு 10 வருட வேலைத்திட்டத்தை மேற்கொள்வேன்.

ஓகஸ்ட் 5ஆம் திகதிக்குப் பின்னர் உருவாகப்போவது நாட்டை ஆட்சி செய்த மூன்று ஜனாதிபதிகளின் ஆதரவுடனான நிலையான அரசாகும்.

அதனால் மக்கள் தகுதியானவர்களை மாத்திரம் தெரிவு செய்து நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும்" என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# எம்.சி.சி. உடன்படிக்கை நாட்டிற்கு மிகப் பொருத்தமானது

## என்கிறார் ஜீனரத்ன தேரர்



(நெளுக்குளம்)

எம்.சி.சி.உடன்படிக்கையானது நாட்டிற்கு பொருத்தமானது. அதில் கையொப்பம் இட முடியும் என்றும் நாட்டில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முடியும் என்றும் ஜனசெத பெரமுன கட்சியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளர் ஸ்ரீ ஜீனரத்ன தேரர் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று எமது நாட்டில் படித்த இளைஞர், யுவதிகள் மருத்துவ கல்விக்காக பணங்களை செலவழித்து வெளிநாடுகளுக்குச் சென்று மருத்துவக் கற்கையை மேற்கொள்கின்றார்கள்.

ஆனால் அவர்கள் மீண்டும் எமது நாட்டிற்கு வருகை தந்து சேவையை வழங்குவதில்லை. இதனால் தனியார் மருத்துவ பீடங்களை இங்கே உருவாக்க வேண்டும். இதன்மூலம் வெளிநாடுகளில் கல்வி கற்கின்ற எமது நாட்டவர்களை திருப்பி அழைத்து வெளிநாட்டுக்கு செல்கின்ற எமது மாணவர்களுக்கு எமது நாட்டிலே மருத்துவ அட்டை வழங்க முடியும். இதன்மூலம் அவர்கள் எமது நாட்டிலே சேவை செய்யக் கூடிய ஒரு வாய்ப்பினை ஏற்படுத்த முடியும்.

அதேபோன்று எமது நாட்டிலே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குறிப்பாக வன்னி மாவட்டத்தில் கணவனை இழந்த பெண்தலைமைத்துவ குடும்பங்களை சேர்ந்த யுவதிகளுக்கு தொழில் சம்பந்தமான பயிற்சிகளை வழங்கி சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கான வசதிகளை மேற்கொள்ள வேண்டும். அதனை எம்மால் இந்த வன்னி மாவட்டத்தில் மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார். எனவே எம்.சி.சி. உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதன் மூலம் எமது நாட்டிலே பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முடியும். அதேபோன்று இந்த வன்னி மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

எனவே வருகின்ற பாராளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்று நாங்கள் பாராளுமன்றம் செல்வோமானால் இந்த வன்னி மாவட்டத்தில் பாரிய அபிவிருத்தி மாற்றத்தை ஏற்படுத்துவோம் என அவர் தெரிவித்தார். (ஜ-4-299)



வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய தேர்த்திருவிழா நேற்று முன்தினம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிறப்புற இடம்பெற்றது. பக்தர்கள் காவடி, பாற்செம்பு, அடியளித்தல், தூக்கு காவடி என தமது நேர்த்திக் கடன்களை மேற்கொண்டனர்.

(படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

## கண்டாவளை மணல் என கடல் மண் கொள்ளை

(தருமபுரம்)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை வண்ணாத்தியாற்றுப் பகுதியின் கடற்கரை பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் கடல் மணலை கொள்ளையிட்டு வெளி மாவட்டங்களுக்கு கண்டாவளை மணல் என ஏற்றி விற்பனை செய்கின்றனர்.

கடல் மணல் அகழ்வதால் அப்பகுதியிலுள்ள கிராமங்கள் மழைகாலங்களில் கடல் நீரில் மூழ்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதுடன் இம்மணல் அகழ்வின் மூலம் அப்பகுதிகளில் உப்பு உற்பத்தியும் இல்லாமல் போய்விட்டதாகவும் அப்பகுதி கிராம அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

இது தொடர்பாக தருமபுரம் பொலிஸார் உரியநடவடிக்கை எடுத்து வருகின்றனர் எனவும் புளியம்பொக்கணை பொது அமைப்புகள் தெரிவித்துள்ளன. (ஜ-4-316)

## யாழ்.பல்கலை.துணைவேந்தர் பதவிக்கான 6 விண்ணப்பங்கள் மதிப்பீட்டுக்குத் தகுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு கிடைத்த 7 விண்ணப்பங்களில் 6 விண்ணப்பங்கள் மதிப்பீட்டுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் தகவல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டத்தின் போது பேரவை உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 15 ஆம் திகதி, பல்கலைக்கழகப் பதிவாளரால் பகிரங்கமாகக் கோரப்பட்ட விளம்பரத்துக்கமைவாக 7 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் ஒரு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் துணைவேந்தரும் கணிதப் புள்ளிவிபரவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன், வணிக முகாமைத்துவ பீடாதிபதி ரி.வேல்நம்பி, மருத்துவ பீடாதிபதி வைத்திய நிபுணர் எஸ். ரவிராஜ், விஞ்ஞான பீடம், தொழில்நுட்ப பீடம் ஆகியவற்றின் முன்னாள் பீடாதிபதியும், கணிதப் புள்ளிவிபரவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா, புள்ளி விபரவியல் துறைப் பேராசிரியர் செ.இளங்குமரன் ஆகியோரின் விண்ணப்பங்கள் மதிப்பீட்டுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டு, பேராசிரியர் அபேகுணவர்த்தன தலைமையிலான மதிப்பீட்டுக் குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழுவின் மதிப்பீட்டின்படி புள்ளிகளின் அடிப்படையிலான திறமைப்பட்டியலின் முதல் 5 பேரின் விபரங்கள் அறிக்கை கிடைக்கப் பெற்றதும், எதிர்வரும் ஒகஸ்ட் 7 ஆம் திகதி அளவில் விசேட பேரவைக் கூட்டம் ஒன்றில் சமர்ப்பிக்கப்பட்டு அன்றைய தினமே பேரவை உறுப்பினர்களால் மதிப்பீடு செய்யப்பட்டு மூன்று பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தெரிவு செய்யப்படும் 3 பேரின் விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர்கல்வி அமைச்சு ஆகியவற்றின் ஊடாக ஜனாதிபதியின் இறுதித் தெரிவுக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஜ-4)





வவுனியா குருமன்காடு ஸ்ரீ விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. மேற்படி ஆலயத்தின் மஹோற்சவம் ஜூன் மாதம் 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 9 ஆம் நாளான நேற்று முன்தினம் இரதோற்சவ பவனி இடம்பெற்றது.

# பாரதம்

## பயங்கரவாதிகள் பதுங்கும் இடம் அழிப்பு



(டில்லி)

ஜம்மு-காஷ்மீரில் பயங்கரவாதிகளின் பதுங்குமிடத்தை பாதுகாப்பு படையினர் அழித்ததுடன், அங்கிருந்த ஏராளமான வெடிபொருட்களைக் கைப்பற்றினர்.

ஜம்மு-காஷ்மீரில் பதுங்கியிருந்து நாசவேலைகளில் ஈடுபடும் பயங்கரவாதிகளை ஒழிக்க, பொலிஸார், பாதுகாப்பு படையினர் இணைந்த கூட்டுப் படையினர் தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். அண்மைக்காலமாக நடந்த தேடுதல் வேட்டையின் போது ஏராளமான பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்நிலையில், ரஜோரி மாவட்டம் தனமண்டி பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து அப்பகுதியை பாதுகாப்பு படையினர் நேற்றுச் சுற்றி வளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது பயங்கரவாதிகள் பதுங்கியிருந்த இடம் கண்டு பிடிக்கப்பட்டது. பயங்கரவாதிகள் அங்கிருந்து தப்பிச்சென்ற நிலையில் அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஏராளமான ஆயுதங்கள், வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டன. கையெறி குண்டுகள், துப்பாக்கிகள், ஏ.கே-47 மகசின்கள், தோட்டாக்கள், டெட்டனேட்டர்கள் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

ரஜோரி பொலிஸார், 38 ராஷ்டிரிய ரைபிள்ஸ், மத்திய ரிசர்வ் பொலிஸ் படை (சி.ஆர்.பி.எப்.) மற்றும் இராணுவம் அடங்கிய கூட்டுக் குழுவினர் இந்த அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டனர். (2)

## யாத்திரிகர்களுடன் சென்ற பேரு
## ரயில் மோதியதில் 22 பேர் உ

(இஸ்லாமாபாத்)

**கிழக்கு பாகிஸ்தானில் சீக்கியயாத்திரி கர்களை ஏற்றிச் சென்ற பேருந்து மீது, பயணிகள் ரயில் மோதியதில் 22 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் படு காயமடைந்தனர்**





குறித்த பேருந்து. ஆளில்லா ரயில் கடவையை கடக்க முயன்ற போது பஞ்சாப் மாகாணத்தின் ஷேகுபுரா மாவட்ட த்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

சீக்கிய யாத்திரிகர்கள் வடமேற்கு நகரமான பெஷாவரைச் சேர்ந்தவர்கள் என்றும் ஷேகு புராவைச் சேர்ந்த நங்கனா சாஹிப்பின் ஆலயத்திலிருந்து திரும்பி வந்தபோதே இந்த விபத்து சம்பவித்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்

## லடாக் மோதல் விவகாரம்
## இந்தியாவிற்கு ஆதரவாகும் ஜப்பான்

(டில்லி)


இந்தியா-சீனா இடையேயான எல்லை கட்டுப்பாடுக் கோட்டுப் பகுதியில் சீனா தன்னிச்சையாக இராணுவ நிலையை மாற்றுவதற்கு ஜப்பான் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இதன் மூலம் லடாக் விவகாரத்தில் இந்தியாவுக்கு ஜப்பான் வலுவான ஆதரவை தெரிவித்துள்ளது.

இந்தியா-சீனா இடையேயான எல்லை கட்டுப்பாடுக் கோட்டுப் பகுதியில் சீனா தன்னிச்சையாக இராணுவ நிலையை மாற்றுவதற்கு ஜப்பான் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இதன் மூலம் லடாக் விவகாரத்தில் இந்தியாவுக்கு ஜப்பான் வலுவான ஆதரவை தெரிவித்துள்ளது.

லடாக் எல்லையில் இந்தியா-சீனா இராணுவம் இடையே நடந்த மோதல் தொடர்பாக இந்தியாவுக்கான ஜப்பான் தூதர் சடோஷி சுசுகி மத்திய வெளியுறவு செயலாளர் ஹர்ஷ் சிரிங்லாவை நேரில் சந்தித்து பேசினார்.

வெளியுறவு செயலர் சிரிங்லாவுடன் ஒரு நல்ல பேச்சு இருந்தது. எல்லை கட்டுப்பாடு பகுதியில் நிலவும் சூழல் குறித்து அவர் தெளிவாக எடுத்துரைத்தார். அமைதியை நிலைநாட்ட இந்திய அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு பாராட்டுகள். ஜப்பானும் பேச்சுவார்த்தை மூலம் கிடைக்கும் அமைதியான தீர்வைத்தான் விரும்புகிறது. ஒருதலைப்பட்சமாகவும் தன்னிச்சையாகவும் இராணுவ நிலைகளை மாற்றும் எந்த முயற்சியையும் ஜப்பான் கடுமையாக எதிர்க்கிறது என அவர் தெரிவித்தார். (2)

## உலகில் ப
## வயதான பூ




(லண்டன்)

உலகில் தற்போது அதிக நாட்கள் உயிர் வாழ்ந்த பூனை தனது 31 வயதில் மரணம் அடைந்தது. இதனால் உரிமையாளர்கள் மிகுந்த சோகத்தில் ஆழ்ந்தனர்.

இங்கிலாந்து நாட்டின் எக்ஸ்டர் நகரை சேர்ந்தவர் மைக்கில் ஹெரிட்டேஜ். இவரது பிறந்த நாளின் போது அவரது நண்பர் பூனைக்குட்டி ஒன்றை பரிசாகக் கொடுத்துள்ளார்.

ரூபில் என பெயர் வைத்து வளர்த்து வந்துள்ளார். மிகவும் ஆரோக்கியமாக வளர்ந்து வந்த செல்லப்பிராணி ரூபிலுக்கு கடந்த ஆண்டு மே மாதம் 31 வயது ஆகியுள்ளது.

பூனையின் இந்த வயது 31 என்பது மனிதனின் 150 வயதுக்கு சமம் ஆகும்.





## தங்கத்தில் முகக்கவசம் தகதகவென மின்னிய
## தங்கப்பிரியன்

(புனே)

புனேயைச் சேர்ந்த பணக்காரர் ஒருவர் தங்கத்தில் முகக்கவசம் செய்து அணிந்து வருவது தொடர்பான புகைப்படங்கள் வைரலாகி வருகின்றன.

உலக நாடுகளை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸிடம் இருந்து தப்பிக்க பல்வேறு வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அதில் முக்கியமான அம்சமாக கருதப்படுவது முகக்கவசம். ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு வைரஸ் கிருமிகள் பரவாமல் தடுப்பதற்காக வாய் மற்றும் மூக்கை மூடும் வகையில் அணிகின்றனர்.

கொரோனாவை தடுக்க அத்தியாவசியமான ஒன்றான முகக்கவசம் பல்வேறு வடிவங்கள் மற்றும் பல்வேறு தரங்களில் கிடைக்கின்றன. சிலர் கைக்குட்டை, துப்பட்டா, முந்தானை என தங்களிடம் இருப்பதையே முகக்கவசமாகப் பயன்படுத்துவதைக் காண முடிகிறது.

இந்நிலையில், மகாராஷ்டிர மாநிலம் புனேயைச் சேர்ந்த சங்கர் குரேட் என்பவர் தங்கத்தினால் முகக்கவசம் தயாரித்து அதனை அணிந்து வருகிறார். ரூ.2.89 இலட்சம் மதிப்புள்ள இந்த முகக்கவசத்தில் சிறிய சிறிய துளைகள் இடப்பட்டுள்ளன.

இதனால் சுவாசிப்பதில் அவருக்கு பிரச்சினை இல்லை. ஆனால், கொரோனா நோய்த் தொற்றில் இருந்து பாதுகாக்க இந்த மாஸ்க் உதவுமா? என்பது சந்தேகம்தான் என்கிறார் சங்கர்.

தங்க நகைகள் மீது மிகுந்த ஆர்வம் கொண்ட சங்கர், தங்க மாஸ்க் அணிந்து போஸ் கொடுக்கும் புகைப்படங்களை இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளார். இணைய வாசிகள் தங்கள் கருத்துக்களை கேலியும் கிண்டலுமாகப் பதிவு செய்துள்ளனர்.

இந்தியாவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 6.5 இலட்சத்தை நெருங்கி உள்ள நிலையில், 18,655 பேர் உயிரிழந்துள்ளனர். புனேயில் மட்டும் சுமார் 6000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர், 274 பேர் மரணம் அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# வெளிநாடு



## பேருந்து மீது

## உயிரிழப்பு



களுக்கு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தனது இரங்கலைத் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் சீக்கிய மதத் தலைவர்களின் பல ஆலயங் கள் இருக்கின்றன.

சீக்கிய நிறுவுநர் குருநானக்கினின் கோவில் ஒன்று, பாகிஸ்தானின் கர்தார்பூரில் இந்தியாவின் எல்லையில் பஞ்சாபில் அமைந்துள்ளது. அவர் 16 ஆம் நூற்றாண்டில் இறந்த பிறகு இக்கோயில் கட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# இரு நாட்டு உறவுகளை வலுப்படுத்த இந்தியா ஒத்துழைக்க வேண்டும்

## சீனா தெரிவிப்பு



(பீஜிங்)

இருநாட்டு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் விதமாக இந்தியா செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென சீனா தெரிவித்துள்ளது.

எல்லை விரிவாக்க காலமெல்லாம் ஓய்ந்து விட்டது. இது வளர்ச்சிக்கான காலம் என பிரதமர் நரேந்திர மோடி சீனாவுக்கு எதிராக கருத்துக்களை தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே குறித்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே டில்லியிலுள்ள சீன தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் ஜி ரோங் தன் டுவிட்டரில் இவ்வாறு பதிவேற்றியுள்ளார்.

குறித்த டுவிட்டர் பதிவில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, "சீனா, அண்டை நாடுகளுடனான எல்லைகளை அமைதி பேச்சுவார்த்தைகள் ஊடாகவே வகுத்துள்ளது.

இந்தச் செயற்பாடுகளினால் அண்டை நாடுகளுக்கிடையில் ஒற்றுமையான பிணைப்பை ஏற்படுத்தியுள்ளோம்.

எனவே, எல்லை விரிவாக்கத்தை சீனா மேற்கொள்வதாகக் கூறுவது பொய்யான கருத்தாகும்.

சீனாவும் இந்தியாவும் இராணுவம் மற்றும் இராச்சிய வழியின் ஊடாக தொடர்பில் இருக்கும் நாடுகள்.

எனவே இரு நாடுகளும் எல்லையில் சூழ்நிலை சிக்கலாகும் விதமாக நடந்து கொள்ளக் கூடாது" என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# கடலருகே புகைப்படமெடுத்த தம்பதியர்; மனைவியை அலையிழுக்கும் காட்சி

## சமூக வலைத்தளங்களில் வைரல் வீடியோ



(கலிபோர்னியா)

கலிபோர்னியாவில் புதுமணத் தம்பதியர் கடல் அலை அருகே நின்று படம் எடுத்த போது எதிர்பாராத விதமாக மனைவியைக் கடல் அலை இழுத்துச் செல்லும் காட்சி இணையத்தில் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள லகுனா கடற்கரையில் படப்பிடிப்புகள் அதிகம் நடைபெறுவது வழக்கம்.

இந்நிலையில் புதிதாக திருமணமான தம்பதி ஒருபடிமேலே சென்று தங்களது திருமண படப்பிடிப்புக்களைக் கடலில் சென்று நடத்திக்கொண்டிருந்தனர்.

அப்போது சிறிது நேரத்தில் இராட்சத அலைகள் அவர்களை இழுத்துச் செல்ல அவர்கள் கத்தி கூச்சலிட பாதுகாப்புப்பணியில் இருந்த படையினர் துரிதமாக செயற்பட்டு அவர்களை மீட்டு கரையில் கொண்டு வந்து சேர்த்தனர்.


மீட்புப்பணியில் இருந்த ஒருவரின் வீடியோ பதிவில் இந்த காட்சிகள் இடம்பெற்றுள்ளன. அலை இழுத்து கடல் நடுவிற்குக் கொண்டு சென்றதால் அவர்களால் இராட்சத அலைகளை எதிர்கொள்ள இயலாமல் தத்தளித்தனர். பின் அவர்கள் உதவுமாறு கூக்குரல் எழுப்பியதை அடுத்து அவர்களை உயிர்காக்கும் படையினர் மீட்டுள்ளனர்.

இந்த வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

இந்த வீடியோவைப் பார்த்த நெட்டிசன்கள், இவர்கள் மட்டுமல்லாது அனைவரும் புகைப் படங்களை எடுப்பதற்காக தேவையற்ற முயற்சிகளை எடுக்க வேண்டாம் என்று அறிவுறுத்தியுள்ளனர். (2)

## மிகவும்

## பூனை மரணம்




சராசரியாக பூனையின் வாழ்நாள் 15 முதல் 18 ஆண்டுகளாக உள்ளது. ஆனால் ரூபில் 31 ஆண்டுகள் வரை உயிர்வாழ்ந்துள்ளது.

உலகில் அதிக ஆண்டுகள் வாழ்ந்த பூனையாக ரூபில் இருந்து வந்தது. ஆனால், கடந்த சில நாட்களுக்கு முன்னர் வீட்டில் இருந்து வெளியே சென்ற பூனை ரூபில் மீண்டும் வீட்டிற்கு திரும்பி வரவில்லை எனவும் அது வயது முதிர்வு காரணமாக உயிரிழந்திருக்கலாம் எனவும் பூனையின் உரிமையாளர் மைக்கில் ஹெரிட்டேஜ் தெரிவித்தார்.

இதுவரை உலகில் நீண்ட நாட்கள் வாழ்ந்த பூனை என்ற சாதனையை கிரீமி பஃப் என்ற பூனை பெற்றிருந்தது. (2)

# பட்டாசு தொழிற்சாலையில் வெடி விபத்து; நால்வர் உடல் கருகிப் பலி, 97 பேர் படுகாயம்



(இஸ்தான்புல்)

துருக்கி நாட்டில் பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி 4 பேர் உயிரிழந்தனர். மேலும் 97 பேர் படுகாயமடைந்தனர்.

துருக்கி நாட்டின் சஹர்யா மாகாணம் ஹெண்டிக் நகரில் பட்டாசுத்தொழிற்சாலை ஒன்று அமைந்துள்ளது. அந்த தொழிற்சாலையில் 180 இற்கும் அதிகமான தொழிலாளர்கள் நேற்று முன்தினம் வேலை செய்து கொண்டிருந்தனர்.

அப்போது திடீரென பட்டாசுத் தொழிற்சாலையில் வெடி விபத்து ஏற்பட்டது. இதன் காரணமாக தொழிற்சாலையில் இருந்த பட்டாசுகள் அனைத்தும் பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறின. இதனால் அங்கு வேலை செய்து கொண்டிருந்தவர்கள் கூக்குரலிட்டு வெளியே ஓடினர்.

இருப்பினும் சில தொழிலாளர்கள் தப்பிக்க முடியாமல் தொழிற்சாலையிலேயே சிக்கிக்கொண்டனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற தீயணைப்பு படையினர் தொழிற்சாலைக்குள் சிக்கிய நபர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

ஆனாலும், இந்த விபத்தில் தொழிற்சாலையில் வேலை செய்துகொண்டிருந்த 4 தொழிலாளர்கள் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 97 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (2)

# பிரதமராக பதவியேற்று ஒரு வாரத்தில் கந்தளாய் சீனித் தொழிற்சாலையை ஆரம்பிப்பேன்

## சஜித் கூறுகிறார்

(கொழும்பு)

**நாட்டின் பிரதமராக பதவியேற்று ஒரு வாரத்தில் கந்தளாய் சீனித் தொழிற்சாலையை ஆரம்பிப்பேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



கந்தளாயில் நேற்று முன்தினம் மாலை ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களை ஆதரித்து கந்தளாய் குணவர்த்தன் மண்டபத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்திலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நான் பதவியேற்று முதலாவது செய்யும் செயற்பாடு எரிபொருட்களின் விலையை குறைப்பது, மக்களின் வரிச்சுமையை குறைப்பது ஆகும்.

இம்மாவட்டத்தில் பாரிய வீட்டுத் திட்ட முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளோம். 177 மில்லியன் ரூபாய்களை நான்கரை வருடத்திற்குள் இம் மாவட்டத்தில் முன்னெடுத்துள்ளோம். அதே போன்று 168 வீட்டுத் திட்ட கிராமங்களை உருவாக்கியுள்ளோம். இது இலேசாக மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அல்ல. பாரிய சிரமத்தின் மத்தியில் இதனை நாம் மேற்கொண்டோம்.

பல இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு மற்றும் மூதூர் சேருவில மற்றும் திருகோணமலையில் 3 தேர்தல் தொகுதிகளிலும் 3 கைத்தொழில் பேட்டைகளை அமைத்து இப்பகுதி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவோம்.

கந்தளாய் சீனித் தொழிற்சாலையை ஆரம்பிப்பது தொடர்பாக காரணங்களை கண்டறிந்து விரைவில் நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என அவர் தெரிவித்தார். (ஜ-2)

# இலங்கையில் சிக்கியிருந்த இந்தியர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

இலங்கையில் சிக்கியிருந்த 117 இந்திய பிரஜைகள் விசேட எயார் இந்தியா விமானம் மூலமாக நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

கொவிட் 19 காரணமாக நாடு திரும்ப முடியாத நிலையில் உலகளவில் சிக்கியிருக்கும் இந்திய பிரஜைகளை இந்தியாவுக்கு கொண்டுவரும், இந்திய அரசின் "வந்தே பாரத் மிஷன்" திட்டத்தினுடைய மூன்றாவது கட்டத்தின் ஓர் அங்கமாக இந்த விமானப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் மேற்கொள்ளப்பட்ட பதிவுகளின் அடிப்படையில் இந்த விமானத்திற்கான பயணிகள் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் அவசரமாக நாடு திரும்ப வேண்டிய நிலையில் இருப்பவர்களுக்கு, குறிப்பாக நிர்க்கதியாகியுள்ள குடிபெயர் தொழிலாளர்கள், விசா காலாவதியான நிலையில் தங்கியிருப்பவர்கள், மருத்துவ உதவிகள் தேவைப்படுவோர், கர்ப்பிணிகள், பெண்கள், முதியவர்கள், குடும்ப உறுப்பினரின் மரணத்தை தொடர்ந்து உடனடியாக இந்தியா திரும்புவதற்கு கோரிக்கைகளை முன் வைத்திருப்போர் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட தரப்பினருக்கு வெளிநாடுகளில் சிக்குண்டிருப்பவர்களுக்காக இந்திய உள்துறை அமைச்சினால் வெளியிடப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட செயற்பாட்டு முறைமையின் பிரகாரம், முன்னுரிமை வழங்கப்படும்.

நாடு திரும்ப முடியாமல் இலங்கையில் தங்கியிருக்கும் இந்தியர்கள் இது வரையில் தம்மை இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் இணையத்தளத்தில் பதிவு செய்ய தவறியிருப்பின் கீழ்வரும் இணையத்தளத்தில் பதிவு செய்யுமாறு கோரப்படுகிறார்கள்.

**https://hcicolombo.gov.in/COVID_helpline** சகல இந்திய பிரஜைகளையும் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் இணையத்தளம் மற்றும் சமூக ஊடகங்களில் பதிவிடப்படும் அறிவித்தல்களை அறிந்து கொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

# போதைப்பொருள் வர்த்தகர்களை விசாரிக்க விசேட பிரிவு உருவாக்கம்

(கொழும்பு)

குற்றங்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய வர்த்தகர்கள் குறித்த விசாரணைகள் மேற்கொள்வதற்கு தனியான விசேட பிரிவு ஒன்றை அமைப்பது தொடர்பாக பொலிஸ் பிரிவு அவதானம் செலுத்தியுள்ளதாக மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வார காலப்பகுதியில், குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பாக அதிகளவான சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்கு முன்னர் கைது செய்யப்பட்ட எண்ணிக்கையை விடவும் இது இரண்டு மடங்கு அதிகமாகும்.

இந்த நிலையில், குற்றங்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் போதைப் பொருள் வர்த்தகத்துடன் ஈடுபடுபவர்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள தனியான விசாரணை பிரிவை நிறுவ பிரதிப் பொலிஸ்மா அதிபர் அவதானம் செலுத்தியுள்ளதாக மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார். (ஜ-2)

# இன்று ஒரு தகவல்

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## கூந்தல்

"ஏன் சேர்? கூந்தலைப் பாதுகாப்பதற்கு என்ன வழி? " அப்படி என்று என்னிடம் வந்து கேட்டா ஒரு அம்மா. அவங்க அப்படி கேட்டதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. ஆனால் அந்த கேள்வியை என்னிடம் வந்து கேட்டாங்கள் பாருங்கோ அது தான் ஆச்சரியம். நான் உடனே ஒரு எண்ணெய்ப் பேரைச்சொல்லி அந்த எண்ணெயை தினமும் தலையிலே தடவிக்கொண்டு வாங்கோ என்றேன்.

எதனாலே குறிப்பாக அந்த எண்ணெயை தடவச் சொல்லுகின்றீர்கள்? என்று கேட்டார். நான் தினமும் அதைத் தான் உபயோகப்படுத்துகின்றேன். அவர் நிமிர்ந்து என் தலையைப் பார்த்தார். "அப்படி என்றால் அது வேணாம் சேர்" வேற ஏதாவதது யோசனை இருந்தால் சொல்லுங்க என்றார்.

நான் உடனே என் யோசனையை வாபஷ் வாங்கிக்கொண்டு நிபுணர்கள் சொல்லுகின்ற யோசனையை சொன்னேன். பொதுவாக பெண்களுக்கு முடி கொட்டுவதற்கு முக்கிய காரணம் என்ன? பலமான காற்று– கடுமையான வெயில் அடிக்கடி தலையிலே பட்டுக்கொண்டு இருந்தால் முடி கொட்டும். சாதாரண சோப்பை அடிக்கடி தலையிலே போட்டு குளித்தாலும் கொட்டும். ரொம்ப முரடா இருக்கின்ற கூந்தல் பிரஷ்ஷை உபயோகித்தாலும் கொட்டும். சத்தான உணவு சாப்பிடாவிட்டாலும் கொட்டும். உடம்பிலே ஓமோன்கள் அளவு சரியாக இல்லாமல் இருந்தால், மன இறுக்கத்திலே இருந்தால், உடல் நிலையிலே மாறுதல் ஏற்பட்டால், கூந்தலை சரியான முறையில் பராமரிக்காமல் விட்டால் முடி கொட்டும்.

சரி இதெல்லாம் இருக்கட்டும். கூந்தலை சரியான முறையில் எப்படி பராமரிக்கிறது? சரியான சத்துள்ள உணவவு சாப்பிட வேண்டும்–பழம், பச்சை காய்கறிகள், முட்டை, பருப்பு வகை இதில் யாருக்குப் பொருத்தமோ அதை அவர்கள் சாப்பிட வேண்டும்.

உணவிலே சத்துக்குறைந்தால் இவர்கள் தலையிலே நாங்கள் இருந்து என்ன பிரயோசனம் ? என்று தலை முடி நினைக்க ஆரம்பித்து விடும். உடம்பிலே அளவுக்கு மிஞ்சி அயர்ச்சி ஏற்பட்டாலும் முடி உதிருமாம்.

இந்த அயர்ச்சியை போக்கனும் என்றால் தினமும் உடற்பயிற்சி செய்யனும். தினமும் திறந்த வெளியிலே காற்றோட்டமான இடத்திலே நடப்பது நல்லது.

அவசியமானால் தினமும் கூந்தலை நீரினாலே அலசலாம். இலேசான இளஞ்சூடான நீரையே உபயோகிக்க வேண்டுமாம்.

மிருதுவான சம்போவையே உயயோகப்படுத்த வேண்டுமாம். அது எவ்வளவு மிருதுவான தரமாக இருக்கோ அவ்வளவுக்கு அது கூந்தலுக்கு நல்லதாம். சம்போ உபயோகப்படுத்துவது எப்படி என்றும் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். முதலிலே கூந்தலை நல்லா நனைத்துக்கொண்டு அதன் பின்பு கையிலே கொஞ்சம் சம்போவை எடுத்துக் கொண்டு கூந்தலிலே பரவலாக தடவ வேண்டும். விரல்கள் நுனியாலே நகம் படாமல் தலையிலே முன் பக்கத்திலேயிருந்து பின் பக்கம் வரைக்கும் சில நிமிடங்களுக்குத் தேய்க்கலாம்.

கூந்தலுக்கேற்ற தனிப்பட்ட ஹெயார்கன்டிசனர் உபயோகப்படுத்தலாமாம். சம்போ கன்டிசனர் வேண்டாம் என்கிறார்கள்.

கூந்தலை தானாகவே உலர விடுவது தான் நல்லதாம். அவசரமாக காய வைக்க வேண்டும் என்று சிலபேர் அதுக்கென்று இருக்கிற உலர வைக்கிற கருவியை உபயோகப்படுத்துவார்கள். அதை தலைக்கு 15 செ.மீ. தூரத்திலே பிடிக்க வேண்டுமாம்.

தலையிலே ஒரு இடத்திலே அதைக்காட்டிக்கொண்டு இருக்கக்கூடாது. ஒரு இடத்திலே சில விநாடிகள் மட்டும் காற்றுப்படாத மாதிரி மாற்றி மாற்றி பிடித்துக் காய வைக்க வேண்டும். கூந்தல் ஈரமாக இருக்கின்றபோது பிரெஸ் செய்யக்கூடாது. ஈரமாக இருக்கின்ற போது அப்பாடிச் செய்தால் கூந்தல் முறிந்து போகுமாம். மிருதுவான–அதிக இடைவெளி உள்ள சீப்பாலே மெதுவாக, கூந்தல் நுனியிலே இருந்து தலையை நோக்கி சீவச் சொல்லுகிறார்கள்.

தலையிலே எண்ணெய்ப் பசை அதிகமாக இருக்கிறதால தான் பொடுகு ஏற்படுகின்றது. பொடுகு இருந்தால் உடனே அதை போக்குவதற்கான வழியைப் பார்க்க வேண்டும். கூந்தலுக்கு நாம் அதிக தொந்தரவு கொடுக்கக் கூடாது. அழுத்தமாகக் கட்டி இறுக்கமாகக் கொண்டை போட்டு அதிலே இரும்பாலான கொண்டை ஊசிகளை செருகக் கூடாது.

வெயிலிலே போக வேண்டி இருந்தால் குடையை எடுத்துக் கொண்டு போங்கள். இல்லையென்றால் தலையிலே எதையாவது கட்டுங்கள். கூந்தல் பாதுகாப்புக்கென்று பல போலியான விளம்பரங்கள் வரும். அதையெல்லாம் நம்பாதீர்கள். இவ்வளவும் கூந்தல் சம்பந்தப்பட்ட நிபுணர்கள் சொல்கின்ற யோசனைகள்! இவ்வளவையும் என்னிடம் சந்தேகம் கேட்ட அம்மாவிடம் விபரமாகச் சொன்னேன்.

ரொம்ப நன்றி என்று சொல்லி எழுந்திருந்தார். ஒரு பெருமூச்சு விட்டார்கள். ஏன் என்று கேட்டேன். ஒரு காலத்திலே என்னுடைய கூந்தல் எப்படி இருந்தது தெரியுமா சேர்? இந்தக் கூந்தல் தரையைத் தொடுகிற அளவுக்கு இருந்தது என்றார்.

எனக்கும்கூட அப்படித்தான்... தலைமுடி தரையைத் தொடும் என்றேன் ரொம்பப் பெருமையாக. அப்படியா? என்றார் ரொம்ப ஆச்சரியமாக. ஆமாம்... தரையிலே படுத்திருக்கும் போது அப்படியென்றேன் அசடுவழிய.

# இஸ்ரேலின் 'இணைப்பு' நடவடிக்கை பதற்றத்தில் பாலஸ்தீனம்

பெருந்தொற்றுக்கு நடுவே புதிய பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறார் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு. பாலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் ஆக்கிரமித்து வைத்திருக்கும் பகுதிகளைத் தங்கள் நாட்டுடன் இணைக்கும் நடவடிக்கைகளில் இஸ்ரேல் அரசு இறங்கியிருக்கிறது. பாலஸ்தீனர்களைக் கொந்தளிப்பில் ஆழ்த்தியிருக்கும் இந்நடவடிக்கைக்கு இஸ்ரேலின் மிக நெருங்கிய நட்பு நாடான பிரிட்டன் முதல் பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றன. எனினும் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசின் ஆதரவு இருப்பதால் நெதன்





யாஹு இதில் துணிச்சலுடன் இறங்குகிறார்.

### ஒருதலைப்பட்சமானது

இஸ்ரேலின் இறையாண்மையை மேற்குக் கரையில் உள்ள யூதக் குடியேற்றங்களுக்கும் ஜோர்தான் பள்ளத்தாக்கு பகுதிக்கும் விரிவுபடுத்துவது என்பதுதான் இந்த இணைப்பு நடவடிக்கையின் முக்கிய நோக்கம். கடந்த முதலாம் திகதி இதைத் தொடங்குவது என்று இஸ்ரேல் சில மாதங்களுக்கு முன் முடிவெடுத்திருந்தது. இதன்படி, ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரைப் பகுதியில் கிட்டத்தட்ட 30 சதவீத நிலத்தை இஸ்ரேல் தன்னுடன் இணைத்துக் கொள்கிறது.

இது ஜெனிவாவின் நான்காவது மாநாட்டின் தீர்மானத்தையும் சர்வதேசச் சட்டங்களையும் மீறும் செயல் என்பதில் சந்தேகமில்லை. ஒரு நாடு இன்னொரு நாட்டுக்குச் சொந்தமான ஒரு நிலப் பகுதியின் மீது தனது அரசியல் ரீதியான, சட்ட ரீதியான, இராணுவ ரீதியான இறையாண்மையை ஒருதலைப்பட்சமாக அறிவிப்பது அல்லது மாற்றம் செய்வது இணைப்பு (Annexation) என்று அழைக்கப்படுகிறது. ஐ.நாவைப் பொறுத்தவரை இத்தகைய இணைப்பு சட்டவிரோதம் ஆகும்.

### மத்திய கிழக்குத் திட்டம்

ட்ரம்ப் அரசு அறிவித்த மத்திய கிழக்குத் திட்டம்தான். இதில் முனைப்புடன் ஈடுபட இஸ்ரேல் பிரதமர் நெதன்யாஹுவுக்கு உத்வேகம் தந்திருக்கிறது. இதன் சூத்திரதாரி ட்ரம்ப்பின் மருமகனும் ஆலோசகருமான ஜாரெட் குஷ்னர்தான். 2020 ஜனவரி மாதம் அமெரிக்காவுக்கு வந்திருந்த நெதன்யாஹு முன்னிலையில் இந்தத் திட்டத்தை அறிவித்தார் ட்ரம்ப். இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையில் நீண்டகாலமாக நிலவிவரும் பிரச்சினைக்குத் தீர்வு காணும் திட்டம் எனும் பீடிகையுடன் இதை அறிவித்த ட்ரம்ப், இதில் பாலஸ்தீனத் தரப்பிலிருந்து பிரதிநிதிகள் பங்கேற்க வேண்டியதன் அவசியம் பற்றியெல்லாம் அலட்டிக்கொள்ளவில்லை. அவர்களுக்கு அழைப்பும் விடுக்கப்படவில்லை.

அந்த நிகழ்ச்சியின்போது உரையாற்றிய நெதன்யாஹு, "இஸ்ரேலின் இதயமாக இருக்கும் நிலப்பகுதியானது, நீண்டகாலமாக எங்கள் தேசப்பற்றாளர்கள் வழிபட்ட, எங்கள் தீர்க்கதரிசிகள் போதனை செய்த, எங்கள் அரசர்கள் ஆட்சி செய்த இடமாகும். ஆனால், அது 'சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி' என்று மூர்க்கத்தனமாக முத்திரை குத்தப்பட்டு வருகிறது. மிகப் பெரிய அந்தப் பொய்யை ஜனாதிபதி ட்ரம்ப் உடைத்திருக்கிறார்" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இந்தத் திட்டத்தின்படி, மேற்குக் கரையில் உள்ள யூத குடியேற்றங்களில் எந்த மாற்றமும் இருக்காது என்றும் இஸ்ரேலின் இறையாண்மையை அந்தப் பகுதிகளுக்கு விரிவுபடுத்துவதையும் ஆதரிப்பதாகவும் அமெரிக்கா அறிவித்தது. இந்தத் திட்டம் பாரபட்சமானது என்பதை அறிந்துகொண்ட பாலஸ்தீனர்கள் இதை ஏற்கவும் இல்லை. எதிர்காலத்தின் பாலஸ்தீனம் இப்படித்தான் இருக்கும் எனும் குறிப்புடன் ஒரு வரைபடத்தையும் டுவிட்டரில் வெளியிட்டார் ட்ரம்ப். அதைக் கடுமையாக விமர்சித்தனர் பாலஸ்தீனர்கள். "இது ஒரு சதி. இது ஒரு போதும் நிறைவேறாது" என்று பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்டார்.

### செல்வாக்கை அதிகரிக்கும் முயற்சியா?

எனினும், ட்ரம்ப் தந்த உற்சாகத்தில் நெதன்யாஹு இவ்விடயத்தில் தீவிரம் காட்டுகிறார். இதில் உள்நாட்டு அரசியல் கணக்குகளும் உண்டு. அவர் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. வலதுசாரி ஆதரவாளர்களுக்கு இடையே அவரது செல்வாக்கு குறைந்து வந்தது. அதனால்தான், குறுகிய காலத்துக்குள் மூன்று முறை அவர் தேர்தலைச் சந்திக்க வேண்டி வந்தது. 2019 ஏப்ரல் மாதத்திலும் 2019 செப்டெம்பரிலும் தேர்தல் நடந்தும் நெதன்யாஹுவால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியவில்லை. 2020 மார்ச் மாதம் நடந்த தேர்தலிலும் 29.46 சதவீதம் வாக்குகளையே அவரது லிகுட் கட்சியால் பெற முடிந்தது. இதையடுத்து, மேலும் அரசியல் குழப்பங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க, பென்னி கான்ட்ஸ் எதிர்க்கட்சியான "ப்ளூ அண்ட் வைட்" கட்சியுடன் கூட்டணி அரசை அமைத்திருக்கிறார். இந்நிலையில், இப்படியான அறிவிப்புகள் மூலம் அவர் தனது பலத்தை அதிகரித்துக்கொள்ள முயல்கிறார் என்று கருதப்படுகிறது.

### சவப்பெட்டியின் கடைசி ஆணி

பாலஸ்தீன நிலப் பகுதிகளை ஆக்கிரமிப்பதை நிறுத்திக்கொள்ளுமாறு ஐ.நா.தீர்மானங்கள் பலவற்றில் வலியுறுத்தப்பட்டிருந்தும் இஸ்ரேல் அதைப் பொருட்படுத்தியதில்லை. 1980 இல் கிழக்கு ஜெருசலேம், 1981 இல் கோலான் குன்றுகள் ஆகிய பகுதிகளை இப்படி சட்டவிரோதமாக இணைத்துக்கொண்டது இஸ்ரேல்.

இந்தச் சூழலில், "இஸ்ரேலின் இந்தத் திட்டம், சவப்பெட்டியின் கடைசி ஆணியாக அமைந்துவிடும்" என்று பாலஸ்தீன அமைச்சரும் யூதக் குடியேற்றங்களுக்கு எதிரான ஆணையத்தின் தலைவருமான வாலித் அஸ்ஸாஃப் கூறியிருக்கிறார். 1993 இல் இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையில் கையெழுத்தான ஓஸ்லோ ஒப்பந்தத்துக்கும் இது குந்தகத்தை விளைவிக்கும் என்று பாலஸ்தீனர்கள் கருதுகிறார்கள். இஸ்ரேல் இணைத்துக்கொள்ளும் பகுதிகளில் சர்ச்சைக்குரிய ஜோர்தான் பள்ளத்தாக்கும் அடங்கும். இந்தப் பள்ளத்தாக்கில் உள்ள வளமான விவசாய நிலங்களையும் நீர் வளத்தையும் தங்களால் பயன்படுத்த முடியாத சூழல் ஏற்படும் என்றும் பாலஸ்தீனர்கள் அஞ்சுகிறார்கள். "இந்நடவடிக்கை தொடர்ந்தால் 1967 போருக்கு முன்னர் இருந்ததைப் போல எல்லைகளை வகுத்துத் தன்னிச்சையாக ஒரு தேசத்தை உருவாக்கிக் கொள்வோம்" என்று பாலஸ்தீனப் பிரதமர் முகம்மது ஷ்டேயே எச்சரித்திருக்கிறார். மிகப் பெரிய மோதல் ஏற்படும் என்று ஜோர்தான் மன்னர் அப்துல்லாவும் கடுமையாக எச்சரித்திருக்கிறார்.

### குழப்பங்கள்

எல்லாவற்றையும் தாண்டி, இணைப்பு தொடர்பான அறிவிப்புகளில் ஒரு குழப்பத்தன்மை இருப்பதை உணர முடிகிறது. ஜூலை 1 இல் இணைப்பு நடவடிக்கைகள் தொடங்கும் என்று சொல்லப்பட்ட நிலையில், இந்நடவடிக்கையை இத்தனை சீக்கிரம் தொடங்க வேண்டியதில்லை என்று கூட்டணிக் கட்சித் தலைவர் பென்னி கான்ட்ஸ் அதிரடித் தெரிவித்தார். கொரோனா வைரஸ் பரவலின் விளைவாக ஏற்பட்டிருக்கும் பொருளாதாரச் சரிவு, கொரோனா வைரஸின் இரண்டாவது அலை ஏற்படும் சூழல் ஆகியவற்றுக்குத்தான் அதிக முக்கியத்துவம் தரப்பட வேண்டும் என்பது பென்னி கான்ட்ஸின் நிலைப்பாடு.

இந்நடவடிக்கைகள் ஜூலை 1 இல் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் உடனடியாகத் தொடங்கப்படாது என்று இஸ்ரேல் வெளியுறவுத் துறை அமைச்சர் கபி அஷ்கெனாசி கூறியிருக்கிறார். எனினும் இந்நடவடிக்கையிலிருந்து இஸ்ரேல் எளிதில் பின்வாங்குவதாகவும் தெரியவில்லை.

அமெரிக்காவில் ஏற்கனவே, பேர்னி சாண்டர்ஸ் போன்ற ஜனநாயகக் கட்சித் தலைவர்கள் இதைக் கடுமையாகக் கண்டித்திருக்கிறார்கள். ஒருவேளை அமெரிக்காவில் நவம்பரில் நடக்கவிருக்கும் தேர்தலில் ட்ரம்ப் தோல்வியடைந்து ஆட்சி மாற்றம் ஏற்பட்டால், நெதன்யாஹுவின் வேகத்துக்கு முட்டுக்கட்டை போடப்படலாம். அதற்குள் இந்தப் பிரச்சினை மிகப் பெரிய அளவில் வெடித்துவிடாமல் இருக்க வேண்டும் என்பதுதான் பலரது எதிர்பார்ப்பு.

த இந்து

# விவசாயத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்

## ஜனாதிபதி கோட்டா உறுதி

(கொழும்பு)

**தற்போது காணப்படும் பிரச்சினைகள் மற்றும் குறைகளை தீர்த்து விவசாயத்திற்கு நாட்டில் முன்னுரிமை வழங்கப்படு மென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரி வித்தார்.**

அநுராதபுரம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் தேர்தல் பிரசார கூட்டங் களில் கலந்துகொண்ட ஜனா திபதி விவசாயிகள் முகம்கொடு த்துவரும் நீர் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் அவதானத்தை செலுத்துவதாக தெரிவித்தார்.

விவசாயிகள் முகம்கொடுக் கும் உரம் மற்றும் நீர்ப்பற்றாக் குறை போன்ற பிரச்சினைக ளைத் தீர்ப்பதற்கும் சந்தை வாய்ப்புக்கள் கிடைப்பது போன்ற பல பிரச்சினைகளை தீர்த்து விவசாயிகளை பாதுகாப்பதாக வும் ஜனாதிபதி உறுதியளித்து ள்ளார்.



மேலும் நீர் வழங்கல் பற் றாக்குறை, விவசாயத்திற்கான உரம் போன்ற பிரச்சினைகள் அரசாங்கத்தால் தீர்க்கப்படுகின் றன என்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

கொடுப்பனவுகள் செலுத்தப் படாததால் உர இறக்குமதி தாம தமாகி உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# சமூக ஊடகங்களில் எம்.சி.சி.தொடர்பாக

## பொய்த்தகவல்கள் பரப்புரை



(கொழும்பு)

எம்.சி.சி.உடன்படிக்கையில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கைச்சாத்திடுவதற்கு முயன்ற தாக சமூக ஊடக பதிவுகளில் வெளியான செய்திகளில் உண் மையில்லையென முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதி பதியாக பதவிவகித்த காலப்பகு தியில் எம்.சி.சி. உடன்படிக்கை குறித்து அமெரிக்காவுடன் இண க்கப்பாட்டிற்கு வரமுயன்றார் என தெரிவிக்கப்படுவதை நம்ப வேண்டாம் எனவும் அவர் கூறி னார். 2004 இல் எம்.சி.சியின் சில திட்டங்களிற்கு அமெரிக்கா நிதியை வழங்குவதற்கு முன் வந்ததாகவும் இந்த உதவித் திட்டத்தில் என்ன விடயங்கள் இடம்பெறவேண்டும் என 2006 இல் பேச்சுக்கள் இடம்பெற்றன என்றும் கூறினார்.

விக்கிலீக்ஸில் தெரிவிக்கப் பட்டுள்ள விடயங்கள் 2006 பேச்சுவார்த்தைக்கும் 2019 இல் நல்லாட்சி அரசாங்கம் இணங்கிய விடயத்திற்கும் இடையில் பாரிய வித்தியாசம் உள்ளதை வெளிப்படுத்தியு ள்ளன என்றும் நாட்டை ஆப த்திற்குள்ளாக்கும் எந்த நட வடிக்கைக்கும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இணங்கியிராது என்றும் அவர் கூறினார். (ஜ-4)

# சப்ரகமுவ மாகாணத்தில் 1500 ஆசிரியர் வெற்றிடங்கள்

(இரத்தினபுரி)

சப்ரகமுவ மாகாணத்தில் 1500 ஆங்கிலம் மற்றும் ஆரம் பக்கல்வி ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுவதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித் தார்.

சப்ரகமுவ மாகாணத்தின் கல்வி நிலைமைகள் தொடர் பாக நேற்று முன்தினம் ஊடக ங்களுக்குத் தகவல் வழங்கிய போதே அவர் இதனைத் தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களின் 1128 பாடசாலைகளில் மொத் தம் நான்கு இலட்சம் மாணவர் கள் கல்வி கற்கின்றனர்.

கடந்த காலப்பகுதிகளில் சப்ரகமுவ மாகாணத்தின் கல்வி நிலை மிகவும் உயர்ந்த நிலை யில் காணப்பட்டது.

எனினும் தற்போது இவ் வளர்ச்சியில் பின்னடைவு காண ப்படுகிறது.

அதனால் இந்நிலைமை யைச் சீர்செய்து மீண்டும் நாம் இழந்த இடத்தை மீள்வதற்கு முயற்சிக்க வேண்டும். இவ்வி யத்தில் துறைசார்ந்தோரின் கூட்டு முயற்சி முன்னெடுக்கப் படல் வேண்டும்.

கிராமப்புற பாடசாலைகளி னது கல்வி நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படா தமையால் பெற்றோர்களும் மாணவர்களும் நகர்ப்புற பாட சாலைகளை நாடி வருகின்ற னர்.

ஆசிரியர்கள் தமது கடமை களைச் சரிவர நிறைவேற் றினால் இவ்வாறான நிலை மைகள் ஏற்படுவதற்கு இட மில்லை.



எனவே தமது கடமைகளை முறையாக நிறைவேற்றாத ஆசிரியர்களுக்கு எதிராக நட வடிக்கைகளை மேற்கொள்வது டன் சிறப்பாக பணியாற்றும் ஆசிரியர்களுக்கு உரிய கௌர வம் அளிக்கப்பட வேண்டும்.

நாட்டின் கல்வித் திட்டத்தை முறைப்படுத்தி வழிநடத்தும் ஜனாதிபதியின் கல்வி முறை மையை சப்ரகமுவ மாகாணத் தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரி வித்தார். (ஜ-4)

# இனி எந்தத் தடையும் இல்லை நிரந்தர ஜனாதிபதியாகும் புடின்

(மொஸ்கோ)

ரஷ்யாவின் அரசியலமைப் பில் திருத்தம் செய்யலாமா என்பது தொடர்பாக நடத்தப்பட்ட தேர்தலில் பெரும்பான்மையா னோர் ஆதரவு தெரிவித்துள்ள தால் விளாடிமிர் புடின் 2036 ஆம் ஆண்டுவரை ஜனாதிபதி யாக செயற்பட முடியும்.

விளாடிமிர் புடின் 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி ரஷ்யாவின் ஜனாதிபதியாக பதவியேற்றார்.

அப்போது முதல் ரஷ்யா வின் ஜனாதிபதி அல்லது பிரத மர் ஆகிய இரண்டு பதவிகளில் ஏதேனும் ஒன்றில் தன்னை நிலைநிறுத்திவந்த புடின் கட ந்த 2018 ஆம் ஆண்டு நடை பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மிகப்பெரிய வெற்றிபெற்றார்.

இதனால் 2024 வரை ரஷ் யாவில் புடினின் ஆதிக்கம் இருக்கும். இந்த வெற்றியின் மூலம் தொடர்ச்சியாக இரண்டா



வது முறையாக ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையில், ரஷ்யாவில் உள்ள சட்டத்தின்படி ஒரு நபர் தொடர்ந்து இரண்டு முறைக்கு மேல் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாது.

இதனால் 2024 ஆம் ஆண்டு நடைபெற உள்ள தேர்தலில் புடின் போட்டியிட முடியாத சூழல் இருந்து வந்தது.

இந்தத் தடையை நீக்கும் விதமாக ஜனாதிபதித் தேர் தலில் போட்டியிடுவதற்கான சட்டத்தைப் புதுப்பிக்கும் வித மாக அந்நாட்டு பாராளுமன்றத் தில் மசோதா ஒன்று நிறை வேற்றப்பட்டது.

அந்த மசோதாவின் படி, பழைய நடைமுறைகள் அழிக் கப்பட்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கான சட் டம் மீண்டும் முதலில் இருந்தே அமுலுக்குவரும்.

அதாவது, ஏற்கனவே தொட ர்ச்சியாக இரண்டு முறை ஜனா திபதித் தேர்தலில் போட்டியிட்ட வர்கள் சட்டம் புதுப்பிக்கப்பட்ட தால் மீண்டும் முதலில் இரு ந்தே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாம்.

இதனால் தற்போது ஜனா திபதியாக உள்ள புடின் அடு த்துவரும் 2024 ஆம் ஆண்டு மற்றும் 2030 ஆம் ஆண்டு ஆகிய இரண்டு தேர்தல்களி லும் எந்தவித தடையும் இன்றி போட்டியிடலாம். (ஜ-2)

# எல்லையில் படைகள் குவிப்பு

## மறுக்கிறது பாகிஸ்தான் இராணுவம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் ஜில்ஜித்-பல்டிஸ் தான் பகுதியில் எல்லை கட்டுப் பாட்டுக் கோட்டையொட்டி பாகி ஸ்தான் கூடுதலாக 20 ஆயிரம் இராணுவ வீரர்களை குவித்து இருப்பதாக வெளியான தக வலை பாகிஸ்தான் இராணு வம் திட்டவட்டமாக மறுத்துள் ளது.

லடாக்கில் இந்திய-சீன படை களுக்கு இடையே மோதல் ஏற்பட்டுள்ள நிலையில், பாகி ஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் ஜில்ஜித்-பல்டிஸ்தான் பகுதியில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட் டையொட்டி பாகிஸ்தான் கூடுத லாக 20 ஆயிரம் இராணுவ வீரர்களைக் குவித்து இருப்ப தாகத் தகவல் வெளியாகி உள் ளது.

ஆனால் இதை பாகிஸ்தான் இராணுவம் திட்டவட்டமாக மறுத்து இருக்கிறது. இது பொய் யான, உண்மைக்கு மாறான பொறுப்பற்ற தகவல் என்று பாகிஸ்தான் இராணுவத்தின் ஊடகப்பிரிவின் இயக்குநர் ஜெனரல் பாபர் இப்திகார் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள் ளார்.

எல்லையை நோக்கி படை களை நகர்த்தவில்லை என் றும் எல்லை பகுதிக்கு கூடுதல் படைகளை அனுப்பி வைக்கவி ல்லை என்றும் அதில் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-2)

# ஆன்மீகம்

## செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்!

பாடலை ஊன்றிப் படிக்காத அறியாமையில் தலை கவிழ்ந்து நின்றார் பல பட்டங்களைப் பெற்றவர். ஆம்! சரித்திரம் நமக்குக் கற்றுத் தருவது எல்லாம் மேலும் சரித்திரம் படிக்க வேண்டும் என்பதைத்தானே! கல்வியும் கேள்வியுமே அறிவுக் கருவூலத்தைத் திறக்கும் அற்புதமான சாவிகள். மனிதகுல முன்னேற்றத்திற்கு முதல் இரு படிகளாக விளங்குபவை இவை மட்டுமே ஜெகம்புகழும் புண்ணிய கதையான இராமாயனத்தைக் காவியத் தமிழில் தந்தவர் கம்பநாடர். "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர் போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை என்று கம்பரை உச்சிமேல் வைத்து மெச்சுகிறார் பாரதியார்.

கம்பருக்குத் தமிழ் உலகம் தந்துள்ள பட்டம் கல்வியில் பெரியவன் கம்பன் என்பது தான். காவிய ஆரம்பத்தில் நாராயணரை ஆராதனை செய்கிறார் கம்பர். கவிச்சக்கரவர்த்தி அல்லவா. அற்புதமாகச் சொற்பதம் கொடுக்கிறார். ஒருவரிடம் இருக்கும் பொருளையே நாம் அவருக்குப் பரிசாகத் தந்தால் அவர் பரவசப்படமாட்டார். இல்லாத ஒரு பொருளை அன்பளிப்பாகத் தந்தால் தானே ஆனந்தமடைவார். இறைவன் எங்கும் எதிலும் இருப்பவர். அவரிடம் இல்லாதன இல்லை. ஆனால் கம்பர் இறைவனிடம் இல்லாத ஒன்றையும் நம்மிடம் மிக அதிகமாக இருக்கும் பொருள் ஒன்றையும் கண்டுபிடித்து கடவுளுக்குக் காணிக்கையாக வைக்கிறார்.

அதுதான் "அறியாமை" கார் ஆகும். மேனி கருணாகரமூர்த்திக்கு ஆராதனை என் அறியாமை ஒன்றுமே இறைவன் அறிவின் சொரூபம் நானோ அறியாமையின் இருப்பிடம் என்று கம்பர் பாடும் போது நாமெல்லாம் எங்கே இருக்கிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உயிர் வாழ்வதற்காகத் தான் நாம் உண்ண வேண்டும்.

சிலபேர் உண்பதற்காகவே உயிர் வாழ்கிறார்கள். இத்தகையோர் இறப்பதே மேல் என்னும் திருவள்ளுவர் "செவிக்கு உணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என்கிறார்.

இத்திருக்குறளையே சற்று மாற்றிப் புகழ்பெற்று விடுகிறது நெப்போலியனின் வாழ்க்கை. வயிற்றுக்கும் செவிக்கும் ஒரே நேரத்தில் உணவு எடுத்துக் கொள்வான் அவன். தினசரி மதிய உணவு நேரத்தில் அவன் சாப்பிடும் பொழுது அவன் உதவியாளர்கள் அன்றைய செய்திகளைப் படிப்பார்கள்.

அதைக் கேட்டுக் கொண்டே சாப்பிடுவது தான் அவன் அன்றாடப்பழக்கம். இரவில் தூங்கும் வரை மனைவி நல்ல நூல்களைப் படித்துக்காட்ட வேண்டும் என்பதும் அவன் அன்புக்கட்டளை.

பக்தியை நம் பெரியவர்கள் பகுத்துள்ளனர். கேட்டல், இசைத்தல், எண்ணுதல் இவ்வாறாக "ச்ரவணம், கீர்த்தனம், ஸ்மரணம்" என ஒன்பது விதமாக உரைப்பார்கள். இந்த பக்தி செலுத்தும் வரிசையில் செவி வழியாகக் கேட்கும் பக்திக்கே முதலிடம் தந்துள்ளார்கள். பிறந்த குழந்தைக்குக் காது குத்தி அணி புனையும் விழா நடத்துகின்றோம். நல்ல பல செய்திகளைக் கேட்பதால்தான் செவி சிறப்பு பெறுகின்றது. அதுவே காதணி மாட்டும் விழா என்கிறார் திருவள்ளுவர்.

கண்களுக்கு இமை என்னும் கதவுகளையும் நாக்கிற்கு உதடுகள் என்னும் கதவுகளையும் தந்துள்ள இறைவன் காதிற்கு எவ்விதக் கதவுகளையும் தரவில்லை. தொலைக்காட்சியிலேயே விழிகளை வைத்திருக்காதே. சற்று மூடிக்கொள் என்பதற்காக இமைக்கதவுகளையும் கண்டபடி பேசிவிடாதே என்பதற்காக இமைக்கதவுகளையும் கண்டபடி பேசிவிடாதே என்பதற்காக வாய்க்கு உதடுகளையும் தந்துள்ள இறைவன் நல்ல செய்திகள் எத்திசையிலிருந்தும் உன் செவிகளில் கேட்கட்டும் என்பதற்காகத்தான் கதவின்றி காதுகளைப்படைத்துள்ளார்.

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் அதனால் தான் இரு செவிகளையும் செவ்வேள் இயல்புடன் காக்க என்கிறார் பாம்பன் சுவாமிகள். குழந்தையாகிய குமரவேல் சொல்ல சிவபெருமானே உபதேசம் கேட்டார் என்னும் போது நாமெல்லாம் எம்மாத்திரம்? பள்ளிக்கூடமே செல்லாத ஒருவர் தன் ஊர் ஆலயத்தில் நடைபெறும் சொற்பொழிவு ஒன்றைத் தினசரி கேட்டுக்கொண்டிருந்தார்.

ஒரு நாள் இரவு வீடு திரும்பியபின் அவரது மனைவி கேட்டாள். கோயில் பகவத்கீதை விரிவுரை நடைபெறுகிறது. தினசரி போகும் நீங்கள் அங்கு தெரிந்து கொண்டது என்ன? "எனக்கு முழுவதுமான ஒன்றும் விளங்கவில்லை. இருந்தாலும் கேட்க வேண்டும் போல் இருக்கிறது. அதனால் செல்கிறேன் என்றார். மனைவி சிரித்தபடியே சொன்னாள் "கரித்துண்டுகள் அள்ளும் கூடையில் தண்ணீர் எடுத்து வரமுடியுமா? முழுவதுமான தண்ணீர் ஒழுகிவிடும்.

ஒரு காதில் வாங்கி மறுகாதில் விட்டுவிடும் உங்களுக்கு எதற்கு இந்த வீண் வேலை? கணவரின் பதில் அற்புதமாக இருந்தது. கரிக்கூடையில் பலமுறை தண்ணீர் மொண்டாலும் தண்ணீர் ஒழுகி விடுகிறது. ஆனால் கரிக்கூடை அழுக்கு நீங்கி சுத்தமாகி விடுகிறதே நாளும் நாளும் நல்ல செய்திகளைக் கேட்பதே நம்மை நல்லவராக உருவாக்கும்.

# கொழும்பு துறைமுகத்தின் இரு முனையத் திட்டங்களை ஆராய ஐவர் கொண்ட குழு

- 45 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு
- குழுவுக்கு 8 பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளது



**(கொழும்பு)**

**கொழும்பு துறைமுகத்தின் ஜய கொள்கலன் முனையம் மற்றும் கிழக்கு முனையத்தின் அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக ஏற்பட்டிருக்கும் சிக்கலை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐவர் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளார்.**

துறைமுகம் மற்றும் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே.மாயதுன்னே குழுவின் தலைவராக பெயரிடப்பட்டுள்ளார்.

கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர் எம்.பி.டி.யு.கே.மாப்பா பத்திரன, வீதி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யூ.ஆர்.பிரேமசிறி, மின்சாரம் மற்றும் கனியவள அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேரா, இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் ஓய்வு பெற்ற ஜெனரல் ஆர்.எம்.தயாரத்னாயக்க ஆகியோர் குழுவின் ஏனைய அங்கத்தவர்களாவர்.

**குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள்**

ஜய கொள்கலன் முனையத்திற்குரிய மீள்கட்டுமான செயற்பாடுகள் தொடர்பான பிரச்சினைகளை ஆய்வு செய்தல்.

இலங்கை துறைமுக அதிகார சபைக்குரிய ஜய கொள்கலன் முனையத்தின் ஆழ்கடல் நங்கூரம் இடலின் இயலுமையை அதிகரித்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் தொடர்பான அமைச்சரவை தீர்மானங்கள் மற்றும் 2017 ஜூலை 26 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள் தொடர்பாக நிதி அமைச்சர் மேற்கொண்ட கண்காணிப்புக் கமைய நடைபெறுகின்றதா? எனப் பரீட்சித்தல்.

இயந்திரங்களைக் கொண்டு வருவதற்கு முன்னர் ஜய கொள்கலன் முனையத்தை ஏன் அபிவிருத்தி செய்யவில்லை என்பதை ஆராய்தல்.

வேண்டுகோள் இல்லாமல் ஆரம்பிக்கப்பட்ட மீள்கட்டுமான செயற்பாடுகள் மற்றும் அதனால் ஏற்பட்ட முதலீட்டு இழப்புகள் மேலும் முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கு முன் இயந்திரங்கள் எதற்காக கப்பலில் ஏற்றப்பட்டதென ஆராய்தல்.

இலங்கை அரசு ஏனைய நாடுகளுடன் கொழும்பு துறைமுகம், விசேடமாக கிழக்கு முனையம் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பான ஆய்வு.

மேலே குறிப்பிட்ட 01, 02 மற்றும் 03 ஆவது சந்தர்ப்பங்களில் இலங்கை துறைமுக அதிகார சபை, நிரல் அமைச்சுக்கள் மற்றும் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக நிதி மற்றும் முதலீட்டு இழப்புகள் பற்றிய மீளாய்வு.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கு யார் பொறுப்பு என்பதை இனங்காணுதல்.

வணிக, கடற்றொழில் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகள் மூலம் உயர் பயனைப் பெற்றுக்கொள்ள முடியும் வகையில் மேலே குறிப்பிடப்பட்ட இரு முனையங்களையும் அபிவிருத்தி செய்வதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல் போன்றனவாகும்.

நேற்று முன்தினம் தொடக்கம் 45 நாட்களுக்குள் குறித்த நிரல் அமைச்சுக்கள் மற்றும் தரப்பினர் தொடர்பாக குழு தமது அறிக்கையை முன்வைக்க வேண்டும் என ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். (ஜ-4)

# கிரிக்கெட் ஆட்ட நிர்ணய சதி விவகாரம்; மகிந்தானந்தவுக்கு எதிராக விசாரணைகள்

(கொழும்பு)

கிரிக்கெட் ஆட்ட நிர்ணய சதி இடம் பெற்றதாக குறிப்பிடப்படும் கருத்து தொடர்பில் முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவிற்கு எதிராகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றும் இந்த விவகாரம் பொதுஜன பெரமுனவின் வெற்றிக்கு எவ்வித பாதிப்பினையும் ஏற்படுத்தாது என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிரிக்கெட் ஆட்ட நிர்ணய சதி தொடர்பில் எவ்வித உறுதியான சாட்சியங்களும் கிடைக்கப் பெறாத காரணத்தினால் விசாரணை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன.



ஆகவே, ஆட்ட நிர்ணய சதி இடம்பெற்றதாக குற்றஞ்சாட்டிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேவிற்கு எதிராகவும் விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

அரசாங்கம் ஒருபோதும் அரசியல்வாதிகளுக்கு சிறப்பு சலுகைகள் வழங்காது. சுயாதீனமான முறையில் விசாரணை நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# யாழில் விபத்து! முதியவர் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் கோவில் வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் 60 வயதுடைய முதியவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம்தொடர்பில்தெரிய வருகையில்,

வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் இருந்த சாரதி பக்க கதவினை திறந்து கொண்டு இறங்க முற்பட்டுள்ளார். அந்த வேளை மோட்டார் சைக்கிளுடன் வந்து கொண்டிருந்த முதியவர் கார் கதவுடன் மோதி தலையில் படுகாயமடைந்த நிலையில் மயக்கமுற்றுள்ளார். அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்ட முதியவர் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். குறித்த விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை யாழ். பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4-33)

## தனிமைப்படுத்தலிலிருந்து 152 பேர் வெளியேறினர்


(வவுனியா)

வவுனியா வேளாண்குளம் வன்னி விமானப்படை முகாமில் தனிமைப்படுத்தலுக்குட்பட்டிருந்த 152 பேர் நேற்று 14 நாட்கள் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த பின்னர் தங்களது வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

14 நாட்கள் தனிமைப்படுத்தலை வெற்றிகரமாக நிறைவு செய்த இவர்கள் பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்குப் பின்னர் இவ்வாறு வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஜ-2)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2066

**சியாம்**



கடவுள் சிலவற்றை தாமதமாகக் கொடுத்தாலும் தரமானமாகக் கொடுப்பார் சோர்ந்து போகாதே!

**பரத்**



தூக்கி வீசப்பட்ட இடத்தில் மரமாக வளர்ந்திடு! தூக்கி வீசியவர்கள் அண்ணார்ந்து பார்க்கும் அளவிற்கு

**ஜெய்**




உனக்காக நான் மட்டும் இருக்கிறேன் என்று சொல்லும் ஒரு உறவு மட்டும் கிடைத்தால் போதும் வாழ்வில் சோகத்திற்கும் தனிமைக்கும் செல்லத் தேவையில்லை

**ஆர்யா**



நீ ஒருவரின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த அறிவோ, அழகோ, பணமோ தேவையில்லை. அக்கறை இருந்தால் போதும்

**வினய்**



அற்புதம் என நினைப்பவை எல்லாம் வெகு அற்பமென காட்டிவிடும் காலம்

**கிரிஷ்**



எப்போது முடிவுகளை நாம் எடுக்கப் பழகுகிறோமோ அப்பொழுதுதான் அதன் விளைவுகளை எதிர்கொள்ளும் தைரியமும் நமக்குள் பிறக்கும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# எதிர்வரும் பொதுத்தேர்தல் ஐக்கிய தேசிய கட்சியின் இறுதி அரசியல் அத்தியாயம்

## பிரதமர் திட்டவட்டம்

(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சியின் பிளவினை இனியொருபோதும் சீர்செய்ய முடியாது என்றும் எதிர்வரும் பொதுத்தேர்தல் ஐக்கிய தேசியக் கட்சியின் இறுதி அரசியல் அத்தியாயம் என்று கூட குறிப்பிடலாம் என்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்தார்.**

பெலியத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர், வரலாற்று பின்னணியை கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி இன்று பலவீனமடைந்துள்ளது என சுட்டிக் காட்டினார்.



யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்னர் வடக்கு மற்றும் கிழக்கின் அபிவிருத்திப் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டன என சுட்டிக்காட்டிய பிரதமர் அபிவிருத்தி பணிகளில் மாகாணங்களுக்கிடையில் எவ்வித வேறுபாடும் காணப்படக்கூடாது என்ற நோக்கில் அவ்வாறு செயற்பட்டதாக தெரிவித்தார்.

ஆனால் கடந்த அரசாங்கத்தில் எந்த மாகாணத்திலும் முறையான அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படவில்லை என்றும் மாறாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவிற்கும் மத்தள விமான நிலையம் நெற்களஞ்சியசாலையாகவும் மாற்றப்பட்டதாக குறிப்பிட்டார்.

அத்தோடு அரசியல் பழிவாங்கலுக்காக நாட்டின் அபிவிருத்தி, நிர்மாணப்பணிகள் முடக்கப்பட்டன என்றும் இதன் காரணமாக பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இதேவேளை இராஜதந்திர மட்டத்திலான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடும் போது நாடாளுமன்றத்தின் அனுமதி அவசியம் என்ற யோசனையை அமைச்சரவையில் கொண்டு வர எதிர்பார்த்துள்ளதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (ஐ-2)

# மேலும் இரு கடற்படையினர் குணமடைவு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் (கொவிட் 19) தொற்றுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவந்த மேலும் 2 கடற்படை வீரர்கள் மீது நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளின் பின் குறித்த வைரஸ் அவர்களின் உடலில் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டதுடன் வைத்தியசாலைகளில் இருந்து அவர்கள் வெளியேறியுள்ளதாக கடற்படை பேச்சாளர் தெரிவித்தார்.

இவ்வாறு வெளியேறிய இருவருடன் இதுவரை 879 கடற்படை வீரர்கள் முழுமையாக குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.

வெளியேறிய கடற்படை வீரர்கள் சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றி மேலும் 14 நாட்களுக்கு தனிமைப்படுத்த கடற்படை நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# விரைவில் மலையகத்திற்கு தனியான பல்கலைக்கழகம்

## இ.தொ.கா. கூறுகிறது

(கண்டி)

மலையகத்திற்கு என்று தனியான பல்கலைக்கழகம் அமைப்பது தொடர்பான வேலைகள் ஐம்பது சதவீதம் நிறைவடைந்துள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரசார செயலாளர் கணபதி கனகராஜ் தெரிவித்தார்.

ஹற்றனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தலின் போது பொதுஜன பெரமுனவுக்கு 32 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தே அமரர் ஆறுமுகன் தொண்டமான் ஆதரவு வழங்கினார். அதனை அவர்கள் ஏற்றுக்கொண்டும் உள்ளார்கள்.

அதில் முதலாவது கோரிக்கையாக காணப்படுவது மலையகத்திற்கான தனியான பல்கலைக்கழகம். தற்போது அந்த வேலைகள் ஐம்பது சதவீதம் நிறைவு பெற்றுள்ளது. இந்த 32 அம்சக் கோரிக்கை நிறைவேற்றினால் மலையக மக்கள் இன்னொரு மாற்றத்திற்கு கொண்டு வரப்படுவார்கள்.

மலையக மக்களை அடிமை வாழ்க்கையிலிருந்து தேசிய நீரோட்டத்திற்கு கொண்டு வருவதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உழைப்பு தான் காரணம்.

நுவரெலியா மாவட்டத்தில் பொதுஜன பெரமுன கட்சியில் 8 தமிழ் வேட்பாளர்களும் 3 சிங்கள வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர். இலங்கை தொழிலாளர் காங்கிரஸை பொறுத்தவரையில் இரண்டாக பிரிந்து நுவரெலியா மாவட்டத்தில் தேர்தல் களத்தினை சந்தித்து கொண்டிருக்கின்றது என அவர் தெரிவித்தார். (ஐ-2)

# செய்தித்துளிகள்


## நைஜீரிய பிரஜைக்கு மரண தண்டனை

(கொழும்பு)

நைஜீரிய பிரஜையொருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்துள்ளது.

குறித்த நைஜீரிய பிரஜை கொக்கெய்ன் போதைப்பொருள் விற்பனை தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## கடல் கொந்தளிப்பாகக் காணப்படும்



(கொழும்பு)

மேல், வடமேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் எதிர்வரும் சில தினங்களுக்கு மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊவா, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மாத்தறையில் இருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் நீர்கொழும்பில் இருந்து மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக முல்லைத்தீவு வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கடல் நிலை மாத்தறையில் இருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளும் நீர்கொழும்பில் இருந்து மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக முல்லைத்தீவு வரையான கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும்.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும். (ஐ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 50 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 110 | 150 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 160 | 300 |
| தக்காளி | 140 | 160 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 110 | 120 | 100 |
| கோவா | 160 | 140 | 120 | 140 |
| கரட் | 120 | 170 | 170 | 200 |
| பூசணி | 40 | 35 | 40 | 80 |
| புடோல் | 60 | 70 | 60 | 120 |
| வாழைக்காய் | 120 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 150 | 200 | 200-300 | 200 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 200 | 240 | 260 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 130 | 100 | 120 |
| பயற்றங்காய் | 180 | 200 | 200 | 150 |
| லீக்ஸ் | 140 | 140 | 140 | 150 |
| பீற்றூட் | 100 | 100 | 110 | 120 |
| கறிமிளகாய் | 150 | 180 | 120 | 240 |
| முருங்கைக்காய் | 160 | 250 | 250 | 280 |
| போஞ்சி | 200 | 140 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | — | 80 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 300 | 300 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 45 | 35-60 | 50-80 |
| இராசவள்ளி | 300 | 220 | 300 | 280 |
| வெங்காயப்பூ | 300 | 200 | — | — |
| முள்ளங்கி | 100 | 100 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 60 | 50 | 50 |




# விருந்தோம்பல்

அயர்ன்புரம் என்ற ஊரின் அருகே பெரிய காடு இருந்தது. அந்தக் காட்டில் கொடிய வேடன் ஒருவன் வசித்தான். ஒரு நாள் காட்டில் பெரும் புயல் அடித்தது. பயங்கர மழையும் பெய்தது. இடியும், மின்னலும் பயங்கரமாக இருந்தது. காடு எங்கும் பயங்கர வெள்ளமாக காட்சியளித்தது. மேடும் பள்ளமும் தெரியாத அளவு காட்டில் வெள்ளம் பெருகி இருந்தது. அந்தக் காட்டில் பாதை தெரியாமல் குளிரில் நடுங்கிய படியே வேடன் நடந்து கொண்டிருந்தான்.

மழையிலும் புயலிலும் அடிபட்டு ஒரு பெண் புறா தண்ணீரில் விழுந்து கிடந்தது. பாவம் அது குளிரில் நடுங்கி கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது. வேடன் அந்த புறாவை கண்டுவிட்டான். அதை எடுத்து தன் பைக்குள் போட்டுக் கொண்டு ஒரு மரத்தடியில் வந்து அமர்ந்தான்.



அந்த மரத்தில் புறா ஒன்று வெகு நாட்களாக குடும்பம் நடத்தி வந்தது. அப்போது காட்டில் ஆண் புறா மட்டுமே இருந்தது. இரைதேடிவெளியே பறந்து சென்ற பெண் புறா இன்னும் திரும்பி வரவில்லை.

எனவே, ஆண் புறா கவலையுடன் தன் மனைவியான பெண் புறாவைத் தேடிக் கொண்டிருந்தது.

பெண் புறாவோ வேடனிடம் அகப்பட்டுக் கொண்டது. அது மரத்தடியில் அமர்ந்திருந்த வேடனின் பைக்குள் கிடந்து தவித்துக் கொண்டிருந்தது. ஆண் புறா அழுது கண்ணீர் வடிப்பதை அது கேட்டு மனம் குமுறியது.

"ஐயா என் அருமைக் கணவரே... நான் வேடனிடம் சிக்கிக் கொண்டுள்ளேன். என்னை நினைத்து நீங்கள் புலம்ப வேண்டாம். நாம் உயர்ந்த நிலையை அடைய வேண்டும். செயலாலும் எண்ணத்தாலும் நாம் பிறருக்கு உதவி செய்ய வேண்டும். நாம் அன்புடன் வாழ்ந்த மரத்தடியில் இந்த வேடன் தஞ்சமாக வந்து தங்கியுள்ளான். அவன் எத்தகைய கொடியவன். ஆனாலும் நம்மால் விருந்தோம்பப் பட வேண்டியவன். இவன் குளிரால் தவிக்கிறான், பசியால் வாடிக் கொண்டிருக்கிறான். இவனுக்கு உதவுங்கள். நான் இறந்தாலும் வேறு ஒரு பெண் புறாவை மனைவியாக்கிக் கொள்ளுங்கள்," என்று தன் கணவனிடம் பெண் புறா கூவியது.

இதைக் கேட்டு ஆண் புறா வேடன் அருகே வந்தது. வேடன் குளிரால் நடுங்கி வெட வெடத்துக் கொண்டிருந்தான். ஆண் புறா வேடனை அன்புடன் உபசரித்து, "வேடனே உனக்கு என்ன தேவை. கூச்சப்படாமல் என்னிடம் சொல். பகைவன் ஆனாலும், வீட்டுக்கு வந்து விட்டால் அவனை உபசரித்து மகிழ்விப்பது எங்கள் வழக்கம்," என்றது.

"ஏ ஆண் புறாவே நான் வேடன், எனக்கு நீ உதவ முன் வந்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. புறா இனங்களை வேட்டையாடும் எங்களை பகைவராக அல்லவா நீ கருத வேண்டும்," என்றான்.

"வேடரே, நீர் சொல்வது சரிதான். நீர் எங்களுக்கு பகைவர்தான். ஆனால், வெட்ட வருபவனுக்கு மரம் நிழல் கொடுக்கிறதே. அது போல் தான் தீமை செய்தவருக்கும் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் உதவ வந்தேன்." என்று கூறியது.

வேடன் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தான். அவன் புறாவைப் பார்த்து, "என்னால் குளிரைத் தாங்க முடியவில்லை. படுபயங்கரமாக குளிர்கிறது. என் குளிரை போக்க வழியுண்டா," என்று கேட்டான்.

"அன்புள்ள ஆண் புறாவே, நீ என் குளிரை போக்க உதவி செய்தாய். இப்போது எனக்கு கடுமையாக பசிக்கிறது. என் பசியை போக்க ஏதாவது செய்," என்றான்.

"வேடரே, நாங்கள் ஏழை புறாக்கள். கவலை இல்லாமல் வாழ்பவர்கள், அன்றாடம் கிடைக்கும் உணவை சாப்பிட்டு நிம்மதியாக தூங்கி விடுவோம். மறு நாளைக்கு சேர்த்து வைப்பது இல்லை. எங்கள் காடுகளில் ஒன்றும் இல்லை. ஆனாலும், விருந்தினரான உம்மை பசியால் வாட விடுவது சரியானது அல்ல. எனவே, உமக்கு உணவு தர நான் தயாராகிவிட்டேன்," என்று கூறியது.

பின்னர் எரியும் தீயை அதிகமாக்கியது. தீ மள மளவென எரிந்தது. நெருப்பை வலம் வந்து அதில் குதித்தது. "வேடரே, எனக்கு வேறு வழி தெரியவில்லை. எனவே, என்னையே உமக்கு உணவாக தருகிறேன்," என்று கூறியது. தீயில் அதன் உடல் கருகி வெந்து அதன் உயிர் பிரிந்தது.

வேடன் இதைக் கண்டு மிகவும் அதிர்ச்சி அடைந்தான். புறாவின் விருந்தோம்பல் அவனை திகைப்படைய வைத்தது.


"நான் பெரும் பாவி. புத்தியற்றவன். இவ்வளவு அருமையான அன்புள்ள புறாக்களை நான் வேட்டையாடி குவித்துள்ளேன். இனி இந்த பாவத் தொழிலை செய்யமாட்டேன்," என்று எண்ணி வருந்தினான்.

தன் கையில் வேட்டையாட வைத்திருந்த பொருட்களை தூக்கி வீசி எறிந்தான். பெண் புறாவையும் விடுதலை செய்தான்.

பெண் புறா விடுதலை அடைந்ததும் தன் கணவனின் தியாகத்தை எண்ணி மகிழ்ந்தது. தானும் தீயில் விழுந்து இறந்தது. தவறை எண்ணி மனம் வருந்திய வேடன் அன்று முதல் வேட்டையாடும் தொழிலை விட்டான்.

டியர் குட்டீஸ் அடைக்கலம் புகுந்தவன் எவ்வளவு கொடியவனாக இருந்தாலும் அவனை உயிரைக் கொடுத்தாவது காத்த புறாக்களின் அன்பு எத்தனை மேலானது பார்த்தீர்களா?

## நிறம் தீட்டுங்கள்



## திடீர் மழை



கூ..கூ..வென போகுது
ரயிலு வண்டி
பாம்..பாம்..என போகுது
பேருந்து
கல கலவென இருக்குது
டவுன்
வள வள வென
பேசிக்கொண்டு பொது
ஜனங்கள்
திடுமென கறுக்குது
மேகங்கள்
டம்...டம் என இடிக்குது
வானம்
ஸ்..ஸ் என வீசுது காற்று
சோவென பெய்யுது
மழைத்துளிகள்
சல சல வென ஓடுது
மழைத் தண்ணி
மள மள வென விரியுது
கருங் குடைகள்
கறுத்த குடைக்குள்ளே
பல தலைகள் !
குடு குடுவென ஓடுது
ஜன வெள்ளம்
அடடா ! அடடா !
மழையே

## இதில் உள்ள தமிழ் வார்த்தைகளை கண்டுபிடியுங்கள்

| | | |
|---|---|---|
| டி | த | ம் |
| க | ய் | ல் |
| ஓ | ட | வு |



தாழ்வான
உயிரினங்களிலும்
மனிதன்
உயர்வானவன்
என்றால், தாழ்ந்த
உயிரினங்களைத்
தின்று மனிதன்
உயிர்வாழ்வது
என்பது
அவ்வுயர்வின்
நோக்கம் அல்ல
-காந்தியடிகள்

செய்வதை 100 சதவீத ஈடுபாட்டுடன் செய்தால், உங்கள் உள்ளுணர்வு உங்களைச் சரியான பாதைக்கு அழைத்துச் செல்லும்.

- சத்குரு ஜக்கி வாசுதேவ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் தவறிழைத்தார் என்ற பழிச்சொல் வேண்டாம்

சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களின் அகிம்சை வழி உரிமைப் போராட்டத்தை நசுக்கியதன் காரணமாகவே ஆயுதப் போராட்டம் எழுச்சி பெற்றது.

ஆயுதப் போராட்டம் உச்சத்தைத் தொடும் வேளையில், எங்கள் இனத்துக்குள் இருந்த காட்டிக் கொடுப்புகளும் ஒற்றுமையீனங்களும் மகத்தான விடுதலைப் போராட்டத்தை வீணடித்துப் போனது.

இதற்கு மேலாக, சர்வதேச சக்திகளின் சூழ்ச்சிகளும் எங்களுக்குத் துரோகம் இழைக்க தமிழினம் நாதியற்று நிற்கின்ற பெரு வேதனை ஏற்படலாயிற்று.

ஆயுதப் போராட்டம் மௌனித்துப் போக, தமிழினத்தின் உரிமையை வென்றெடுப்பது எங்ஙனம் என்று ஏங்கியபோது, எம் இனத்துக்கு ஏற்பட்ட இழப்புகளே எங்களுக்கான பலம் என்ற அசரீரி கேட்கிறது.

ஆம், தமிழின அழிப்பு, போர்க்குற்றச்சாட்டு என்றவாறு சர்வதேச சமூகத்திடம் நீதி கேட்கின்ற வாய்ப்பு ஏற்பட்டது.

சர்வதேசமே சிறுபான்மைத் தமிழினத்துக்கு வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த கொடூரம் கேளாயோ, சனல் - 4 காணொளி பாராயோ என்று கூக்குரல் இட்டு; குய்யோ முறையோ என்று கதற வேண்டிய நம் தமிழ் அரசியல் தரப்பு இலங்கை ஆட்சியாளர்களைக் காப்பாற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தது.

இலங்கையில் நடந்தது தமிழின அழிப்பு என சர்வதேச சமூகமும் சர்வதேச தொண்டு நிறுவனங்களும் உச்சரித்துக் கொண்டிருக்கையில், அதனை உறுதிப்படுத்தும் வகையில் சனல் - 4 வன்னிப் பெருநிலப் பரப்பில் நடந்த போர்க்குற்றங்களை ஆதாரப்படுத்தி காணொளி வெளியிட்ட வண்ணமிருந்தது.

இனி இலங்கை ஆட்சியாளர்கள், படைத்தரப்பினர் தப்ப முடியாது என்றிருந்த வேளை, எங்கள் தமிழ் அரசியல் தரப்பு இலங்கை அரசாங்கத்துடன் சேர்ந்து எல்லாவற்றையும் பழுதடையச் செய்துவிட இன்று எங்கள் இழப்பு ஆறிய கஞ்சியின் கணக்காய் போயிற்று.

இந்த இடத்தில்தான் தமிழ் மக்கள் தம் சுட்டுவிரல் நீட்டி நீங்கள் தவறிழைத்து விட்டீர்கள் என்று குற்றம் கூறும் படலம் தொடங்குகிறது.

குற்றம் கூறுவதும் குறை காண்பதுமே எங்கள் வேலை என்பதாக இருந்தால், இன்னும் சில வருடங்களின் பின்னர் தமிழ் மக்களை நோக்கி நீங்கள் தவறிழைத்து விட்டீர்கள். உங்கள் தவறால் உங்கள் தமிழ் மண்ணில் உயிர் நீத்த அத்தனை பேரும் பாவங்கள் என்றாகி விட்டது எனக் கதை மாறும்.

ஆகையால் நிதானமாகச் சிந்தித்து செயலாற்ற வேண்டிய நேரம் இது என்பதை தமிழ் மக்கள் ஒருபோதும் மறந்துவிடலாகாது.

## கொரோனா வைரஸ் பரவியது எப்படி

# ஆய்வு செய்வதற்கு அடுத்த வாரம் சீனா செல்கிறது உலக சுகாதார நிறுவனக்குழு

(ஜெனிவா)

**கொரோனா வைரஸின் தோற்றம் பற்றியும் மனிதர்களுக்கு பரவிய விதம் பற்றியும் ஆராய்வதற்காக உலக சுகாதார நிறுவனத்தின் வல்லுநர் குழு அடுத்த வாரம் சீனா செல்லவுள்ளது.**

உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸின் தோற்றம்பற்றி பெரும் சர்ச்சை நிலவிவருகிறது. சீனாவின் மத்திய நகரமான வுஹானில் உள்ள இறைச்சி சந்தையில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் இந்த வைரஸ் முதன்முதலாக வெளிப்பட்டதாக தகவல்கள் வெளிவந்தன.

அதைத் தொடர்ந்து அந்த சந்தை மூடப்பட்டு விட்டது. ஆனால் வுஹானில் கொரோனா வைரஸ் தோன றியதாக சீனா ஒப்புக் கொள்ளவில்லை.

இதற்கிடையே கொரோனா வைரஸ வுஹானில் உள்ள வைராலஜி நிறுவனத்தில் செயற்கையாக உருவாக்கப்பட்டு, அங்கிருந்து கசிந்து விட்டதாக அமெரிக்க தொலைக்காட்சி பரபரப்பு செய்தி வெளியிட்டது.

அதைத் தொடர்ந்து இந்தக் குற்றச்சாட்டை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், வெளியுறவு அமைச்சர் மைக் போம்பியோவும் கூறி வந்தனர்.

ஆனால் அமெரிக்க படைவீரர்கள்தான் இந்த வைரஸைச் சீனாவில் கொண்டு வந்து விட்டதாக சீனா குற்றம்சாட்டுகிறது. இதை அமெரிக்கா நிராகரித்தது. இப்போது இந்தத்தோற்றம் பற்றி விசாரணை நடத்த உலக சுகாதார நிறுவனம் முன்வந்துள்ளது.

கொரோனா வைரஸ் தோற்றம் பற்றி ஆராய்ந்து அறிவதற்காக உலக சுகாதார நிறுவனத்தின் வல்லுநர் குழு அடுத்த வாரம் சீனாவுக்கு செல்லவுள்ளது. இந்தக் குழு, கொரோனா வைரஸ் எவ்வாறு மனிதர்களிடம் முதன் முதலில் பரவியது, விலங்குகள் மூல மாக மனிதர்களிடம் தொற்று வந்ததா? அல்லது வௌவால்களிடம் இருந்து மனிதர்களிடம் பரவியதா? என்பது குறித்து முழுமையாக விசாரணை நடத்தவுள்ளது. (ஜ-4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** விடத்தற்பளை, கெற்பெலி, கிளாலி, கிளாலி இராணுவ முகாம், விடத்தற்பளை பண்ணை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, புளியங்குளம், கிறிஸ்தவகுளம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** காலை 10 மணியிலிருந்து மதியம் 2 மணி வரை சிறுநாவற்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னார் Palmyrah house, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ்தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலை ஐஸ் தொழிற்சாலை, Palmyrah house கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, New Silk Road, தோட்டவெளி, Timex ஆடைத்தொழிற்சாலை, Industrial Estate, மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட் சிற்றி, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும், மேலும காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை துருக்கி நகரம் தாராபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## பிரான்ஸின் புதிய பிரதமராக ஜீன் காஸ்டெக்ஸ் நியமனம்!

(பாரிஸ்)

பிரான்ஸின் புதிய பிரதமராக, ஜீன் காஸ்டெக்ஸ் பொறுப்பேற்கவுள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோன் அறிவித்தார்.

பிரான்ஸின் பிரதமராக பதவி வகித்த 49 வயதுடைய, எட்வர்ட் பிலிப், கொரோனா வைரஸ்க்கு எதிரான நடவடிக்கைகளில், முறையாக செயற்படவில்லை என்ற கருத்து நிலவி வந்த நிலையில் கடந்த இரு மாதங்களில் அந்நாட்டு மக்களுக்கு, முகக்கவசம் மற்றும் மருத்துவ உபகரணங்களில் பற்றாக்குறை ஏற்பட்டதுடன், பரிசோதனைகளும் முறையாக நடைபெறவில்லை என்ற முறைப்பாடுகளும் எழுந்துள்ளன.

இதையடுத்து 28 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோன் தலைமையிலான அரசு, நாட்டின் அனைத்து பகுதிகளிலும் தோல்வியைத் தழுவியது.


இதனால், பிரதமர், எட்வர்ட் பிலிப், நேற்று முன்தினம், தனது பதவியை இராஜினாமா செய்தார்.

இதையடுத்து வைரஸ் பிரச்சினையில், தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்ட, 55 வயதுடைய ஜீன் காஸ்டெக்ஸ், புதிய பிரதமராக பொறுப்பேற்பார் என பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோன் தெரிவித்தார். (ஜ-4)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**உலகில் எப்படி வாழ்வது என்பதையாவது தெரிந்துகொள்ளும் அளவுக்கு உன்னை நீயே அறிந்து கொள். அதுவே வாழ்க்கையில் நீ அடையத்தக்க பெரும்பேறு. -ஜேம்ஸ் டக்ஸில்**

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- நடுகிறவனும் நீர்பாய்ச்சுகிறவனும் ஒரு மாதிரி தான். ஆயினும், ஒவ்வொருவனும் தன் உழைப்புக்கேற்ற ஊதியத்தையே பெறுவான்.
- தேவையுள்ளவன் என்றைக்கும் மறக்கப்படுவதில்லை. எளியவர்களின் எதிர்பார்ப்பு என்றைக்குமே நசிந்து போய்விடுவதில்லை.
- இரவோ முன்பே கழிந்து போயிற்று. பகலோ மிகவும் நெருங்கிவிட்டது. ஆகையால், இரவின் செயல்களை உதறிவிட்டு, ஒளியின் கவசங்களை அணிந்து கொள்வோம்.
- உறக்கத்தை விரும்பாதே, விரும்பினால் வறுமை அடைவாய், கண் விழித்திரு; திருப்தியான அளவு உணவு பெறுவாய்.
- கடவுளே நமக்கு அடைக்கலமும் பலமும் ஆனவர். துன்பங்களிடையே உற்ற துணையும் ஆனவர்.
- எந்தக் காலத்திலும் எவரும் கடவுளைக் கண்டதில்லை. நாம் ஒருவரையொருவர் நேசித்தால் நம்முன் கடவுள் வசிக்கிறார்.
- உன்னிடத்தில் வந்து கேட்பவனுக்குக் கொடு. உன்னிடம் கடன் கேட்க விரும்புகிறவனுக்கு முகத்தைத் திருப்பாதே.

# 2020 ஐ.பி.எல். போட்டியை வெளிநாட்டில் நடத்த திட்டம்

**2020 ஐபிஎல் போட்டி இந்தியாவில் நடைபெற வாய்ப்பில்லை எனவும் இலங்கை அல்லது ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெற வாய்ப்புள்ளதெனவும் இந்திய கிரிக்கெட் வாரிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.**



கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கடந்த மார்ச் மாதம் மத்தியில் இருந்து சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் எதுவும் நடைபெறவில்லை. மார்ச் 29 ஆம் திகதி மும்பையில் தொடங்கி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடக்க இருந்த 13 ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி, கொரோனாவின் கோரத்தாண்டவத்தால் காலவரையறையின்றி தள்ளி வைக்கப்பட்டது.

ஐ.பி.எல். போட்டியை நடத்த முடியாவிட்டால் ரூ.4 ஆயிரம் கோடி வருவாய் இழப்பு ஏற்படும் என்பதால் இந்தப் போட்டியை இந்த ஆண்டு இறுதிக்குள் நடத்திவிட வேண்டும் என்பதில் இந்திய கிரிக்கெட் வாரியம் தீவிரமாக உள்ளது.

அவுஸ்திரேலியாவில் ஒக்டோபர் 18 ஆம் திகதி முதல் நவம்பர் 15 ஆம் திகதி வரை 20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் போட்டி நடைபெற வாய்ப்பு மிகவும் குறைவு என்று கூறப்பட்டாலும், இந்த விடயத்தில் முடிவெடுக்க காலம் தாழ்த்தி வரும் ஐ.சி.சி. இந்த மாதத்துக்குள் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

20 ஓவர் உலகக் கோப்பை போட்டி தள்ளிப்போனால் அந்த காலகட்டத்தில் ஐ.பி.எல். போட்டியை நடத்தலாம் என்று இந்திய கிரிக்கெட் வாரியம் காய் நகர்த்தி வருகிறது.

ஐ.பி.எல். போட்டியை இந்தியாவில் நடத்த முன்னுரிமை அளித்து முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டாலும், கொரோனா வைரஸின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் இந்தியாவில் இந்த போட்டி அரங்கேறுவது கடினம்தான்.

எனவே இந்தப் போட்டியை வெளிநாட்டில் நடத்துவது குறித்தும் இந்திய கிரிக்கெட் வாரியம் ஆலோசனை நடத்தி வருகிறது.

இது குறித்து இந்திய கிரிக்கெட் வாரிய அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கையில், "இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். போட்டியை எங்கு நடத்துவது என்பது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை. அநேகமாக இந்த போட்டி வெளிநாட்டில் நடைபெறவே வாய்ப்புள்ளது.

கொரோனா பரவலால் தற்போது இந்தியாவில் நிலவும் சூழ்நிலையை பார்க்கையில், ரசிகர்கள் இன்றி பூட்டிய மைதானத்தில் போட்டியை நடத்தினாலும்கூட பொருத்தமானதாகவும், பாதுகாப்பானதாகவும் இருக்காது என்றுதான் தோன்றுகிறது.

இதனால் இந்த போட்டியை ஐக்கிய அரபு அமீரகம் அல்லது இலங்கையில் நடத்தலாமா? என்பது குறித்து ஆலோசிக்கப்படுகிறது. கொரோனா பாதிப்பின் தன்மையை பொறுத்து இந்த போட்டியை எந்த நாட்டில் நடத்துவது என்பது விரைவில் முடிவு செய்யப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)




கல்வியங்காடு நொதேண் விளையாட்டுக் கழக கல்விசார் செயற்பாட்டுப் பிரிவினரால் "கல்விக்குக் கைகொடுப்போம்" எனும் செயற்றிட்டத்திற்கமைய நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம், திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 80 மாணவர்களுக்கு சுமார் ரூபா 500 பெறுமதிகொண்ட இலவசக் கையேடுகள் அண்மையில் வழங்கப்பட்டன.

# குணமடைந்தார் டிங்கோ சிங்



முன்னாள் குத்துச்சண்டை வீரர் டிங்கோ சிங், தொடர்ச்சியான சிகிச்சையால் கொரோனாவில் இருந்து முழுமையாக குணமடைந்து ஒரு மாதம் கழித்து வீடு திரும்பியுள்ளார்.

ஆசிய விளையாட்டில் தங்கப்பதக்கம் வென்றவரான முன்னாள் குத்துச்சண்டை வீரர் மணிப்பூரைச் சேர்ந்த டிங்கோ சிங் கல்லீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். சிகிச்சைக்காக டில்லி சென்று விட்டு திரும்பிய போது அவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானார்.

இதையடுத்து இம்பாலில் உள்ள வைத்தியசாலையில் கடந்த மே மாத இறுதியில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சையின் போது நடத்தப்பட்ட 5 பரிசோதனைகளில் அவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

தொடர்ச்சியான சிகிச்சையால் கொரோனாவிலிருந்து முழுமையாகக் குணமடைந்து ஒரு மாதத்தின் பின் வீடு திரும்பினார். (ஜ-4)

# இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் ஷேன்னான் கேப்ரியலுக்கு வாய்ப்பு



இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் விளையாடும், 15 பேர் கொண்ட மேற்கிந்திய தீவுகள் அணியில் விளையாடுவதற்கு வலக்கை வேகப்பந்து வீச்சாளர் ஷேன்னான் கேப்ரியலுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

கணுக்கால் அறுவை சிகிச்சையில் இருந்து மீண்டு வந்த கேப்ரியல், இதுவரை இருப்பு குழுவின் ஒரு பகுதியாக இருந்தார்.

தற்போது, தனது உடற்தகுதியை நிரூபித்து மட்டுமல்லாமல் இரு பயிற்சி போட்டிகளிலும் சிறப்பாகப் பந்து வீசியதால் அணியில் சேர்க்கப் பட்டார்.

இன்ட்ரா- குழு பயிற்சி போட்டிகளில், கேப்ரியல் மூன்று இன்னிங்ஸ்களில் பந்து வீசினார் மற்றும் 122 ஓட்டங்களுக்கு எட்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

2012ஆம் ஆண்டு லோர்ட்ஸ் மைதானத்தில் இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமான, 32 வயதான ஷேன்னான் கேப்ரியல், இதுவரை 45 போட்டிகளில் விளையாடி 133 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ‘என் கழுத்தில் கத்தி வைத்தார்’ கிராண்ட் பிளவர் அதிர்ச்சி தகவல்

பாகிஸ்தான் அணியின் முன்னணி கிரிக்கெட் வீரராக திகழ்ந்த யூனிஸ் கான் என் கழுத்தில் கத்தியை வைத்தார் என்று கிராண்ட் பிளவர் அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளார்.

பாகிஸ்தானின் துடுப்பாட்ட பயிற்சியாளராக பணியாற்றிய சிம்பாவே நாட்டை சேர்ந்த கிராண்ட் பிளவர் தனது பயிற்சி அனுபவங்கள் குறித்து பகிர்ந்துள்ளார். அதில் அவர் கூறியதாவது:-

பாகிஸ்தான் அணிக்கு பயிற்சியாளராக இருந்தபோது, யூனிஸ் கானை கையாள்வது மிகவும் கடினமாக இருந்தது. அவுஸ்திரேலிய மண்ணில் பிரிஸ்பேனில் டெஸ்ட் போட்டியில் பங்கேற்றோம். அப்போது மதிய உணவு இடைவேளை, யூனிஸ் கானுக்கு சில துடுப்பாட்ட "அட்வைஸ்" வழங்க முயன்றேன்.

ஆனால் எனது அறிவுரையைக் கண்டு கொள்ளாத அவர், திடீரென எனது கழுத்தில் கத்தியை வைக்க, பதறிபோனேன். அப்போது அருகில் உட்கார்ந்திருந்த மிக்கி ஆர்தர், இப்பிரச்சினையில் தலையிட்டார்.

அது சற்று வித்தியாசமாக இருந்தாலும், பயிற்சி பணியில் இதுவும் ஒரு பகுதிதான் என எடுத்துக் கொண்டேன். இருப்பினும், இந்த சம்பவம் அந்த தொடரையே எனக்கு நரகமாக மாற்றியது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## இளம் குடும்பப்...

ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கடந்த மாதம் 8 ஆம் திகதி வவுனியா, மகாறம்பைக்குளம், ரம்ப வெட்டிப் பகுதியில் வசித்து வந்த குடும்பம் ஒன்றுக்கும் அயல் குடும்பம் ஒன்றுக்கும் இடையில் வாய்த்தகராறு ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியுள்ளது.

இதன்போது இளம் குடும்பப் பெண் ஒருவர் எரிந்த நிலையில், அயலவர்களால் மீட்கப்பட்டு வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

29 வயதுடைய அஜித் என்ற பெண்ணே தீயில் எரிந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் 25 நாட்களின் பின்னர் குறித்த பெண் சிகிச்சை பலனின்றி நேற்றையதினம் அதிகாலை மரணமடைந்துள்ளார். (ம-3,299)

## கிளிநொச்சியில்...

இதில் கிளிநொச்சி பாரதிபுரத்தினைச் சேர்ந்த சிவமோகன் ரஜீபன் (வயது-19) என்ற இளைஞனே மரணமானவராவார்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியின் அருகே இருந்த நாவல் மரத்தில் மோதியதால் இவ் விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கராயன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,114,350)

## முல்லையில் தேடு...

நாட்களுக்கு முன்னரும் இந்தப் பகுதியில் வெடிபொருடகளை தேடித் தோண்டும் நடவடிக்கை முன் னெடுக்கப்பட்ட போதும் தேடிய பொருட்கள் எதுவும் கிடைக்காத நிலையில்.

நேற்று சிறப்பு அதிரடிப் படையினர் குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினரால் முன்னர் கடற்புலிகளின் முகாம் அமைந்த குறித்த பகுதியில் வெடிபொருட்கள் மற்றும் பெறுமதியான பொருட்கள் புதைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படும் இடத்தில் தோண்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் அனுமதி கோரி தோண்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதும் குறித்த இடத்திற்கு ஊடகவியலாளர்களையோ, பொதுமக்களையோ அனுமதிக்காத நிலையில் சுமார் 6 மணி நேரம் கனரக இயந்திரம் கொண்டு தோண்டப்பட்டபோதும் தேடி வந்த பொருட்கள் எவையும் கிடைக்கவில்லை என்றும் விடுதலைப் புலிகளின் இலட்சினை பொறிக்கப்பட்ட கொடி உள்ளிட்ட சில ஆவணங்களே மீட்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (ம-3,281,316)

## 7 மணித்தியாலங்...

முடங்கிய நிலையில் காணப்பட்டது.

நேற்று அதிகாலை 3.30 மணி தொடக்கம் 8.30 மணி வரை தருமபுரத்தில் பல்வேறு குற்றச்சாட்டினை தடுக்கும் நோக்கில் இராணுவத்தினர், சிறப்பு அதிரடிப் படையினர், புலனாய்வாளர்கள், பொலிஸார் இணைந்து தருமபுரம் பொலிஸ நிலைய பொறுப்பதிகாரி மற்றும் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் புஸ்பகுமார கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட ஐந்து பொலிஸ் நிலைய உத்தியோகஸ்தர்கள் இணைந்து இத்தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இதன்போது இம்முறை பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரும் பல்வேறு குற்றங்களுக்காக 10 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் இரண்டு வாள்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரும் கசிப்பு உற்பத்திக்கான உபகரணங்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 3 பேரும் அனுமதிப்பத்திரமின்றி வாகனங்கள் செலுத்திய குற்றச்சாட்டில் 3 பேரும் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டு பேரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 20 லீற்றர் கசிப்பும் 750 லீற்றர் கோடாவும் கைப்பற்றப்பட்டதுடன் இவர்கள் அனைவரும் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர் எனத் தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கின்சிலி ஹேரத் தெரிவித்தார். (ம-3,316)

## புகையிரதம், பாட...

விமான நிலையம், பேருந்து, புகையிரத சேவைகள், பாடசாலை மற்றும் தேர்தல் நடைபெறும் இடங்கள் என்பன இந்த ஆபத்தான இடங்களாக இருக்கும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அளுத்கே சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுப் போக்குவரத்து சாதனங்களை பயன்படுத்தும்போது, பலர் சமூக இடைவெளிகுறித்து எவ்வித கவனத்தையும் செலுத்துவதில்லை என்பதால், கொரோனா வைரஸ் தொற்று பரவலின் இரண்டாவது அலை ஏற்பட வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொது இடங்கள், பொதுப் போக்குவரத்து சாதனங்களைப் பயன்படுத்தும் மக்கள் முகக்கவசங்களை அணிய வேண்டும் என்பதுடன் சமூக இடைவெளியைப் பேண வேண்டும் எனவும் மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர். (ம-3)

## இரு வேட்பாளர்...

தலை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடத்துவதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் தற்போது பாராளுமன்ற தேர்தல் தொடர்பான சட்டவிதிகள் அமுல்படுத்தப்பட்டுள்ளதனால், வேட்பாளர்களும் ஏனையோரும் அதற்கிணங்கவே செயற்பட வேண்டும்.

இவ்வாறு சட்டவிதியை மீறி செயற்படுவர்களுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுப்பார்கள்.

இந்நிலையில் தேர்தல் முறைகேட்டு சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாருக்கு 85 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

நேற்று சனிக்கிழமை காலை 6 வரையில் இந்த விவகாரம் தொடர்பில் 109 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களுள் 107 பேர் கட்சிகளின் ஆதரவாளர்களும் இரு வேட்பாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 24 வாகனங்களை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். இந்நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## தாலிக்கொடி...

பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொக்குவில்பொற்பதிபகுதியில்தனியாக வீதியால் பயணித்த வயோபதிப் பெண் மணி ஒருவரிடம் அவரை பின்தொடர்ந்து வந்த இரு மர்ம நபர்கள் அவர் கழுத்தில் அணிந்திருந்த 9 பவுண் பெறுமதியுடைய தாலிக்கொடியை அறுத்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை கோப்பாய்ப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

## அறிவிக்கப்பட்ட...

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாவது அலை ஏற்படும் என்று நாம் நம்பவில்லை. எனவே பொது தேர்தல் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள படி நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

கொரோனா பரவலைக் காரணமாகக் கொண்டு வாக்காளரொருவர் வாக்களிப்பை புறக்கணிப்பாராயின் அது அவர் தன் முகத்தின் மீதுள்ள கோபத்தால் மூக்கை வெட்டிக் கொள்வதற்குச் சமமாகும் என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பு - 13 , ஜிந்துப்பிட்டி பிரதேசத்தில் கொரோனா தொற்றுக்குள்ளான நபரொருவர் இனங்காணப்பட்டுள்ளதோடு அங்கு வசிக்கும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இலங்கையில் கொரோனா தொற்றின் இரண்டாவது அலை ஏற்பட்டால் அது பொதுத் தேர்தலை பாதிக்குமல்லவா என்று வினவியபோதே மகிந்த தேசப்பிரிய இதனைத் தெரிவித்தார். (ம-3)

## 10 தமிழ் அரசி...

வெளி சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இரண்டு வருடத்துக்குட்பட்ட தண்டனைக் கைதிகள் 10 பேரும் நேற்று அநுராதபுரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ம-3,9)

## இலங்கையில்...

கொரோனா கெடுபிடிகளுக்கு மத்தியில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் 44ஆவது கூட்டத் தொடர் இடம்பெற்ற நிலையில் தமிழர் உரிமைச் செயற்பாட்டாளர்கள் இதனை வலியுறுத்தியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் பௌத்த தொல்லியல் தடயங்களை பாதுகாப்பு எனும் போர்வையில் ஜனாதிபதியின் செயலணி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த செயலணியால் தமிழர்களின் தொல்லியல் அடையாளங்களை அழித்து, பௌத்த விகாரைகளை அமைக்க பௌத்த பேரினவாத அரசு முடிவு செய் திருக்கிறது. இது ஓர் கட்டமைப்புசார் தமிழின அழிப்பாகும்.

தமிழர்களை அம் மண்ணிலிருந்து வேருடன் பிடுங்கி, நாடற்றவர்களாக மாற்றுவதற்கான திட்டமாகும்.

இந்த இன அழிப்பை ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையம் தலையிட்டு, தடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. (ம-3)


நகை மீட்பு

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக, நீங்கள் அடகுவைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டெடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை.

AAA Gold Center

தொடர்பு : 076 568 4346

(C-9841)



ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 04-07-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1034

H 2 7 6 1 8 1

மஹஜன சம்பத

திகதி 2020/07/04

சீட்டிழுப்பு இலக்கம் 4173

Q 1 3 9 4 0 5

கொவிசெத

சீட்டிழுப்பு திகதி 04-07-2020

சீட்டிழுப்பு இலக்கம் 2468

O 05 16 21 39

வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 1593 திகதி 2020/07/04

O 29 31 58 68

ராசி அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2851 வர்ணம் இளம்நீலம் திகதி 04.07.2020

வெற்றி இலக்கங்கள் 13 23 43 60 இடபம்

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,000,000

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1169

சீட்டிழுப்பு திகதி 04.07.2020 நீலம்

W 43 60 69 76

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,020,320

அத கோடிபதி ADA KOTIPATHI

சீட்டிழுப்பு இல: 970

வர்ணம் : மஞ்சள்

சீட்டிழுப்பு திகதி: 2020.07.04

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 67,506,235/-

வெற்றி இலக்கங்கள் 07 41 64 75 E

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு இல.: 3333 திகதி: 2020.07.04

பச்சை சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள் 19 41 53 73 X

அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 31,946,180/-

## விற்பனைக்கு

தரமான அம்பாறை (8×3)
செங்கல் (Engineering கல்)
விற்பனைக்கு உண்டு.
விலை - 12.50 /=
தொடர்பு : (3202)
**077 025 6640**

## விரைவு பொதிகள் சேவை
**V2 TRAVELS**

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
• நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை
• புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய்
• மருதங்கேணி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை (C-9624)
**0768226240**

## உடனடி வேலை வாய்ப்பு

* Computer Typist
* Finance Manager
* Field Officer
* English Teacher

O/L, A/L சித்தியடைந்த மற்றும் ஆங்கில அறிவுடையோர் விண்ணப்பிக்கலாம். (3191)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வசிப்பவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

**Tel : 076 485 4092**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வாலபூரணி கனகேந்திரன்**
(அன்னம்)

தாயின் மடியில் 1950.01.01
இறைவன் அடியில் 2018.06.29
திதி : பிரதமை

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள். (3190)

ஒட்டுவெளி,
மிருசுவில்.

க.கனகேந்திரன்
குடும்பத்தினர்

## உதவியாளர் தேவை

கொக்குவில் தலையாழி அருள்மிகு ஸ்ரீ சாமுண்டாதேவி சமேத ஞான வைரவர் ஆலயத்தில் கடமை புரிய முன்னனுபவமிக்க சைவ ஆசார சீலரான ஒருவர் ஆலய முகாமைத்துவத்திற்கு உதவியாளராக உடன் தேவை.

விபரங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். (3136)

தொடர்பு இலக்கங்கள் நிர்வாக சபை
**076 622 1193 , 077 535 9103**

## பணியாளர்கள் தேவை

வீட்டுப் பணிப்பெண்கள், வீட்டுப் பராமரிப்பாளர்கள், குழந்தை பராமரிப்பாளர்கள், நோயாளர்களை பராமரிக்க, தோட்டம் பராமரிக்க பணியாளர்கள் தேவை.
(இருபாலாரும் விரும்பத்தக்கது)

தொடர்பு (C-9840)
**077 700 8016 / 075 324 4324**

## வீடு வாடகைக்கு

யாழ். பஸ்தரிப்பிடத்தை அண்டிய பகுதியில் வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய அலுவலக பாவனைக்கு உகந்த வீடு வாடகைக்கு விடப்படும். (C-9837)

**Tel : 076 396 0084**

## விரைவு பொதிகள் சேவை



DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 -5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன

**Lanka Cargo Worldwide Express**

315, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (3191)
021 221 1995
076 283 2397

## வீட்டுப் பணிப்பெண்கள் தேவையா?

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட RS International நிறுவனத்தில் வீட்டுப் பணிப்பெண்களும், குழந்தை பராமரிப்பவர்களும், நோயாளிகளைப் பராமரிப்பவர்களும் மற்றும் பல வேலைகளுக்கும் வேலையாட்கள் உண்டு.

**உங்களுக்கு நம்பிக்கையான வேலை ஆட்கள் தரப்படும்.** (C-9785)

தொடர்புகளுக்கு :
**077 7008016 , 075 3244324**

## வீடு வாடகைக்கு

யாழ். திருநெல்வேலியில் Nursing Home இற்கு அண்மித்த பகுதியில் ஏழு அறைகளுடனும் வாகன தரிப்பிடத்துடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
மாத வாடகை 30,000/= முற்பணம் 300,000/=
Professional Preferred (C-9841)

**தொடர்பு : 071 427 5384**

## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் குறைந்த நாள் வாடகைக்கு 2.3.6 படுக்கையறைகள் கொண்ட தனி Luxury வீடு வாடகைக்கு உண்டு.
மார்கட் புகையிரத நிலையத்திற்கு அருகில்

தொடர்பு (C-9841)
**077 766 7511 (சத்தியா)**

## தீபம் கல்வி நிலையம்

இல. 11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். நகரில் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்
**கலை, வர்த்தகப் பிரிவுகள்.** (3127)

| வர்த்தகப் பிரிவு | கலைப் பிரிவு |
|---|---|
| பொருளியல் - திரு. V. ஜெகதீஸ் | தமிழ் - திரு. இ. வசீகரன் |
| வணிகக்கல்வி - திரு. S.K. பாலசபேஷ் | அரசியல் - திரு. R. பாலகாந்தன் |
| கணக்கீடு - திரு. K. பாலகஜன் | அளவையியல் - திரு. M. சுரேஸ் |
| | ICT - திரு. V. நிறோஜன் |

A/L 2021, 2022 இற்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

தொடர்பு - 077 224 7781 நிர்வாகி

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய்- நவாலி கல்லுண்டாயில் 44.75 பரப்புக் காணி, 2 கிணறுகளும், ஒரு உடைந்த கடையுடன் யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை - காரைநகர் பிரதான வீதியில் உள்ளது. (ஒரு மீன் பதனிப்படும் Factory கடற்கரைப் பக்கம், எதிர்ப்பக்கம் ஒரு வைரவர் கோவிலும் உண்டு.) (C-9841)

தொடர்பு - 077 974 8228,
071 856 1927, 076 061 0703

## மணமகள் தேவை

சுவிஸில் இருந்து வந்திருக்கும் 42 வயதுடைய விவாகரத்துப் பெற்ற இஞ்சினியர் மணமகனுக்கு மணமகள் தேவை. (C-9841)

Email : joghetexas@gmail.com
**Tel : 011 581 1877**

## வேலையாட்கள் தேவை

உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை. (தங்குமிட வசதி, உணவு வசதி, மாதாந்த சம்பளத்துடன்)

- உணவு பரிமாறுபவர்கள் (சப்பிளையர் - ஆண் / பெண்)
- ரொட்டி வேலையாட்கள்
- குசினி வேலையாட்கள்
- சமையல் உதவியாளர்
- மரக்கறி வெட்டுபவர்
- சுத்திகரிப்பாளர்
- காசாளர்
- களஞ்சியப் பொறுப்பாளர்
- தோசை போடுபவர்
- சமையலறை மேற்பார்வையாளர்.

ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (3177)

தொடர்புகளுக்கு
**077 791 7753 / 021 222 2373**
பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகர், நல்லூர், கச்சேரி, திருநெல்வேலி போன்ற இடங்களில் வீடு வாடகைக்கு தேவை. (3207)

**Tel : 077 267 6453**

## வேலையாட்கள் தேவை

நெல்லியடியில் இயங்கும் வியாபார நிறுவனத்திற்கு ஆண்/பெண் வேலை ஆட்கள் தேவை. கிழமை நாட்களில் நேரில் வரவும்.
08.07.2020 - 12.07.2020 வரை.
10 மணி தொடக்கம் 03 மணி வரை.
• ஆண் O/L • பெண் A/L (C-9838)
122, பிரதான வீதி, நெல்லியடி.
**Tel : 077 666 0699**

## 23ம் ஆண்டு நினைவு...



**அருணாசலம் தங்கத்துரை**
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

அரசியலில் எனக்கு ஆசானாய் நல்வழி காட்டிய தங்களை ஒரு போதும் மறவேன்...!

பிறப்பு 17.01.1936
இறப்பு 05.07.1997

மூளாய்
077 727 9238 (C-9839)

தங்க. முகுந்தன்
முன்னாள் யாழ் மாநகர சபை உறுப்பினர். (TULF)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.